விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: பதினாறு — Valampurii

சங்கு 11 வள்ளுவர் ஆண்டு 2041 ஐப்பசி 13 சனிக்கிழமை (30.10.2010) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 315

MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ரா ம் கோ
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

# மாபெரும் போராட்டம் நடத்தி சரத் பொன்சேகாவை மீட்போம்!

## மங்கள எம்.பி. சபதம்



(கொழும்பு)

உலக மனித உரிமைகள் தினத்தன்று மாபெரும் போராட்டமொன்றை நடத்தி முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவை மீட்போம் என நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர தெரிவித்தார். (15ஆம் பக்கம் பார்க்க)

## தென்பகுதி சுற்றுலா பயணிகளால் யாழ்.மக்களுக்கு அசௌகரியம்

### சிவாஜிலிங்கம் சுட்டிக்காட்டு



(கொழும்பு)

தெற்கிலிருந்து செல்லும் பயணிகளினால் யாழ்ப்பாண மக்களுக்கு அசௌகரியங்கள் ஏற்படுவதாக தமிழ்த் தேசிய விடுதலைக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் எம்.கே. சிவாஜிலிங்கம் குற்றம் சுமத்தியுள்ளார்.

தெற்கிலிருந்து சென்றவர்கள் யாழ்ப்பாண நூலகத்திற்குள் (15ஆம் பக்கம் பார்க்க)

## பேராதனை பல்கலைக்கழக இரு பீடங்கள் மூடப்பட்டன

(கண்டி)

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் கலை மற்றும் விவசாய பீடங்கள் காலவரையறையின்றி மூடப்பட்டுள்ளதாக பேராதனைப் பல்கலைக்கழக பிரதி உபவேந்தர் பேராசிரியர் கே.பிரேமரத்ன தெரிவித்தார்.

ஏற்கெனவே சில பீடங்கள் மூடப்பட்டுள்ளதாலும், வெவ்வேறு பீடங்களைச் சேர்ந்தவர்களுக்கு (16ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.பொது நூலகத்தை பார்வையிட சுற்றுலாப் பயணிகளுக்குத் தடை

(யாழ்ப்பாணம்)

யாழ். பொது நூலகத்தை சுற்றுலாப் பயணிகள் பார்வையிடுவதற்கு நேற்றுமுதல் தடைவிதிக்கப்பட்டுள்ளது. யாழ். பொது நூலகத்தில் கடந்த 23ஆம் திகதி இடம்பெற்ற அசம்பாவித சம்பவம் குறித்து கலந்துரையாடல் நேற்று காலை இடம்பெற்றது.

இதில் 10 சுற்றுலாப் பயணிகள் வீதம் நூலகத்தைப் பார்வையிட அனுமதிப்பது என இணக்கம் காணப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில் நேற்று மாலை நூல்நிலையத்துக்குச் சென்ற இராணுவத்தினர், எக்காரணம் கொண்டும் எந்தவொரு சுற்றுலாப் பயணிகளும் நூல்நிலையத்தைப் பார்வையிட முடியாது எனவும் இது மேலிடத்து உத்தரவு எனவும் பிரதம நூலகரிடம் தெரிவித்ததாக கூறப்பட்டது. (15ஆம் பக்கம் பார்க்க)

## கிளிநொச்சி பிரச்சினை குறித்து கட்டளைத்தளபதியுடன் பேச்சு

(கிளிநொச்சி)

கிளிநொச்சியிலுள்ள பாதுகாப்பு நடவடிக்கைத் தலைமையகத்தில் உயர்மட்டப் பேச்சுவார்த்தை ஒன்று நடைபெற்றது. இச்சந்திப்பில் கிளிநொச்சி பாதுகாப்பு நடவடிக்கைத் தலைமையகக் கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் சந்தன ராஜகுருவும் மீள்குடியேற்ற பிரதி அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரனும் கலந்து கொண்டனர். வன்னியில், இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியிலிருந்து வெளியேறியோரின் (15ஆம் பக்கம் பார்க்க)

## 'விடுதலைப் புலிகள் இந்தியாவிலும் உள்ளனர்'

(புதுடில்லி)

இந்தியாவின் தமிழீழ விடுதலைப்புலிகளாக நக்சலைட் தீவிரவாதிகள் உள்ளனர் என்று அந்நாட்டின் மத்திய பிரதேச மாநிலத்திலிருந்து வெளியாகும் சென்ரல் ஸ்ரேனிக்கல் என்ற ஆங்கில பத்திரிகை ஆசிரியர் தலையங்கத்தில் தெரிவித்துள்ளது. அதில் முக்கியமாகத் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு,

கடந்த 25 ஆண்டு காலப்பகுதியில் தமிழீழ விடுதலைப் புலிகள் மிகவும் ஸ்திரமான நிலையில் சொந்தமாக அரசு ஒன்றை வடக்கு,கிழக்கு மாகாணங்களில் ஸ்தாபித்து ஆட்சி நடத்தியிருக்கின்றனர். தரைப்படை, கப்பல்படை, வான்படை ஆகியவற்றையும் வைத்திருந்தனர். அரசு மீது தொடர்ச்சியாக தாக்குதல் நடத்துவதும் அரசுடன் சமாதானப் பேச்சில் பேசுவதும் அவர்களின் சந்தர்ப்பவாத உபாயமாக இருந்து வந்துள்ளது.

நக்சலைட் தீவிரவாதம் நக்சல்வாடிப் பிரதேசத்தில் 1967 ஆம் ஆண்டு தோன்றியது. கடந்த 42 வருடங்களில் இந்தியாவின் 16 மாநிலங்களில் இவ்வியக்கம் விஸ்தரித்துள்ளது. முன்பு கட்டுப்பாட்டிலிருந்திராத புதிய இடங்களில் கூட ஸ்திரமாக காலூன்றி நிற்கின்றார்கள். அதில் (16ஆம் பக்கம் பார்க்க)

## அரசின் ஏகாதிபத்தியத்துக்கு எதிராக அனைவரும் ஒன்றிணைய வேண்டும்

### ரணில் விக்கிரமசிங்க அழைப்பு

(கண்டி)

அரசாங்கத்தின் ஏகாதிபத்திய செயற்பாடுகள் மற்றும் ஜனநாயக விரோத நடவடிக்கைகளுக்கு எதிராக ஒன்றிணைந்து செயலாற்றுவதற்கு எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க அழைப்பு விடுத்துள்ளார்.

கண்டி புஷ்பதான மண்டபத்தில் நேற்று மாலை இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய அவர் பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்களுக்கு அமைச்சுப் பொறுப்பை வழங்கி அவர்களுக்கு கௌரவம் அளித்துள்ள அரசாங்கம், பயங்கரவாதத்தினை ஒழித்து நாட்டையும் நாட்டு மக்களையும் காப்பாற்றிய சரத் பொன்சேகாவுக்கு 30 மாத சிறைத் தண்டனையை வழங்கியுள்ளமையானது ஜனநாயக விரோத செயலாகும் என்றும் சுட்டிக் காட்டியுள்ளார்.



ஜனநாயக விரோத செயற்பாடுகள் மற்றும் ஏகாதிபத்திய நடவடிக்கைகளுக்கு எதிரானதுமான மக்கள் இயக்கம் ஏற்பாடு செய்த ஒன்றுகூடல் நிகழ்வொன்று நேற்று ரணில் விக்கிரமசிங்க தலைமையில் கண்டியில் இடம்பெற்றது. இதன்போது உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். அங்கு அவர் தொடர்ந்தும் கருத்து தெரிவித்ததாவது,

1999ஆம் ஆண்டு ஜனாதிபதித் (16ஆம் பக்கம் பார்க்க)

STUDY IN UK

மிகக்குறைந்த செலவில் குறுகிய நாட்களில் UK செல்ல!

Call: 0771919192

- குறைந்தபட்ச தகமை G.C.E (O/L) போதுமானது. IELTS தேவையில்லை,.
- Sponsor (Bank Arrangement) வசதி செய்து தரப்படும்.

UK-London இல் அரச அங்கீகாரமுடைய கல்லூரிகளுக்கு அதிகமான மாணவர்களை கற்கை நெறிகளுக்காக அனுப்பிய பெருமைக்குரிய எங்கள் கல்லூரி யாழ் மாணவர்களுக்காக யாழ்ப்பாணத்தில்.

WESTMINSTER institute of Higher Studies 0772229286

No. 03, Ramanathan Road, Kallatijunction. Jaffna 0213207778



# வீ.டி. ஜெயரட்ணசிங்கம் வெற்றிக்கிண்ண சிறந்த வீரர்களாக றம்மி, யசிந்தன் தெரிவு


யசிந்தன்

(யாழ்ப்பாணம்)

வீ.டி ஜெயரட்ணசிங்கம் வெற்றிக் கிண்ணத்திற்காக யாழ்.சென்றல் விளையாட்டுக் கழகம் 7வது ஆண்டாக நடத்திவரும் 50 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட துடுப்பாட்டச் சுற்றுப்போட்டியில் முதலாவது அரையிறுதிப் போட்டியில் யாழ்.பல்கலைக்கழக அணி 190 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

இப் போட்டியில் றம்மியராகுலன் 54 ஓட்டங்களைப் பெற்று அணியை வலுப்படுத்தினார். இதன் மூலம் றம்மியராகுலன் இப் போட்டியில் சிறந்த வீரராகத் தெரிவுசெய்யப்பட்டார். இவருக்கு ஈ.எஸ்.தம்பையா ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணமும் பணப்பரிசிலும் வழங்கப்படும்.

இரண்டாவது அரையிறுதிப் போட்டியில் யாழ்.சென்றல் விளையாட்டுக்கழக அணி ஜொலிஸ்ரார் கழக அணியை 64 ஓட்டங்களால் வெற்றியீட்டியது. யாழ்.சென்றல் விளையாட்டுகழக அணி 6 வது இலக்கினை இழக்கும் போது 90 ஓட்டங்களை மட்டும் பெற்றிருந்தது.

அந்நிலையில் யசிந்தன், சலிஸ்ரன் ஜோடி இணைப்பாட்டமாக 90 ஓட்டங்களைப் பெற்றனர். இதில் யசிந்தன் 84 ஓட்டங்களையும் சலிஸ்ரன் 43 ஓட்டங்களையும் பெற்றனர்.

இதில் யசிந்தன் ஒரு சிக்ஸர் 9 பவுண்டரிகள் உட்பட 84 ஓட்டங்களைப் பெற்றமையால் இப் போட்டியில் சிறந்த வீரராகத் தெரிவு செய்யப்பட்டார். இவருக்கு ஆர்.ராஜசிங்கம் ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணமும் பணப்பரிசிலும் வழங்கப்படும். (ச–5)


றம்மியராகுலன்

# சரத்தின் விடுதலையை வலியுறுத்தி ஐ.தே.க. சுவரொட்டிப் போராட்டம்

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவை விடுதலை செய்யக் கோரியும் அரசாங்கத்தின் கடும் போக்குகளை கண்டித்தும் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நேற்று மாலை 5.30 மணியளவில் கண்டி நகரில் சுவரொட்டிப் போராட்டம் ஒன்று இடம் பெற்றது.

சர்வதிகாரத்திற்கு எதிரான மக்கள் இயக்கம் ஏற்பாடு செய்திருந்த இந்த நிகழ்வில் நாடாளுமன்ற அங்கத்துவர்களான மங்கள சமரவீர, திஸ்ஸ அத்தநாயக்க, லஷ்மன் கிரியல்ல, மாகாணசபை அங்கத்தவர்களான சாந்தினீ கோன்கஹகே, லகீ ஜயவர்தனா, செய்னுல் ஆப்தீன் லாபீர், எஸ்.எம்.பீ.டி அல்விஸ், சித்ரா மன்திலக்க, சானக அய்லப்பெரும, கண்டி மேயர் ராஜ புஸ்பகுமார, முன்னாள் மேயர் எல்.பீ.அலுவிகார, மாநகரசபை அங்கத்தவர் இலாகி ஆப்தீன் உட்பட பல உள்ளூராட்சி மன்ற அங்கத்தவர்களும் கலந்துகொண்டனர்.

இவர்கள் கண்டி நகர வீதிகளில் கோஷங்களை எழுப்பி ஊர்வலமாகச் சென்றதுடன் சுவரொட்டிகளையும் ஒட்டி தமது கண்டனங்களைத் தெரிவித்தனர்.

இதில் முதலாவது சுவரொட்டியை எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க ஒட்டி ஆரம்பித்துவைத்தார். ஊர்வலத்தில் சென்றவர்கள் பின்னர் மத வைபவங்களிலும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (ச–5)

# உதுல் பிரேமரத்னவின் கைதுக்கு தொழிற்சங்க மத்திய நிலையம் கண்டனம்

(கொழும்பு)

அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் தலைவர் உதுல் பிரேமரத்னவை கைது செய்தமையைக் கண்டிப்பதாக தேசிய தொழிற்சங்க மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

பொய்யான குற்றச்சாட்டுக்களை முன்வைத்தே உதுல் பிரேமரத்ன கைது செய்யப்பட்டுள்ளதாகவும் தொழிற்சங்க மத்திய நிலையம் குற்றஞ்சாட்டுகின்றது.

மாணவர்களின் உரிமைகளை உறுதிசெய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும் என தேசிய வர்த்தக ஒன்றியங்களின் நிறுவனத்தின் தலைவர் லால் காந்த தெரிவித்தார். தற்போது பல்கலைக் கழகங்கள் அனைத்தும் குழப்பகரமான நிலையில் உள்ளன. இதற்கான பெறுப்பை அரசு வேறொரு தரப்பினரின் தலையில் சுமத்தப் பார்க்கின்றது.

பல்கலைக்கழக மாணவர்களுக்கு எதிராக அரசாங்கம் மேற்கொள்ளும் இவ்வாறான நடவடிக்கைகளை நிறுத்தாவிடின் தொழிலாளர்களும் இப்பிரச்சினையில் இறங்க வேண்டி ஏற்படும் என அவர் மேலும் தெரிவித்தார்.

இலவச கல்வியை அரசாங்கம் நிறுத்துவதற்கு எதிராக ஆர்ப்பாட்டம் நடத்தும் மாணவர்கள் கைது செய்யப்படுகிறார்கள். கைது செய்யப்பட்டுள்ள மாணவர்களை விடுதலை செய்யவேண்டும் எனவும் தொழிற்சங்க மத்திய நிலையம் தெரிவித்தது. (ச–5)

# புதிய குருமனை திறப்பு விழாவும் புதிய மெதடிஸ்த பேராயர் வரவேற்பும்

மெதடிஸ்த திருச்சபையின் வண்ணார் பண்ணை, ஓட்டுமடம் ஆலயத்தின் புதிய குருமனை இன்று சனிக்கிழமை காலை 11.00 மணிக்கு இலங்கை மெதடிஸ்த திருச்சபையின் புதிய தலைவர் (பேராயர்) அருட்கலாநிதி எ.டபிள்யு.ஜெபநேசன் அடிகளால் திறந்துவைக்கப்படவுள்ளது.

யாழ்.சேகர முகாமைக்குரு வண.எஸ்.எஸ்.ஞானராஜா தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் வண்ணார் பண்ணை திருச்சபை பொறுப்பு குரு வண.எஸ்.தேவதாசன், மற்றும் சேகர குருக்களான வண.ஆர்.எஸ்.இ.சுதாகர், வண.சி.கே.தங்கராஜா உட்பட சேகரத்தின் திருப்பணியாளர்கள் திருச்சபைத் தலைவர்கள் சமூக பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

அருட்கலாநிதி எ.டபிள்யு. ஜெபநேசன் இலங்கை மெதடிஸ் திருச்சபையின் புதிய பேராயராக நியமனம் பெற்றபின் முதல் தடவையாக யாழ்ப்பாணம் வருகிறார். இவர் யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், யாழ்.மத்திய கல்லூரியின் பழைய மாணவரும் ஆவார். இவர் 20 வருடங்களுக்கு முன் வண்ணார்பண்ணை மெதடிஸ்த திருச்சபையில் குருவாகவும் பணியாற்றியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ச)

# தமிழ் மக்களின் விருந்தோம்பலை பாராட்டி உளம் நெகிழ்ந்த பிரதமர்

வடக்கு கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த தமிழ் மக்களின் விருந்தோம்பல் கலாசாரத்தையும் பகிர்ந்து உண்ணும் பண்பாட்டையும் உள்ளம் மிகவும் நெகிழ்ந்து பாராட்டினார் பிரதமரும் பௌத்த சாசன மற்றும் சமய விவகார அமைச்சருமான டி.எம்.ஜயரட்ண.

இவர் கொழும்பு பம்பலப்பிட்டியில் உள்ள கதிரேசன் மண்டபத்தில் கொழும்பு மாவட்டத்தைச் சேர்ந்த இந்து ஆலயங்களின் பிரதிநிதிகளை நேரில் சந்தித்துப் பேசினார். அப்போதே இவ்வாறு உள்ளம் நெகிழ்ந்து இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு தெரிவித்தவை வருமாறு

நான் வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு அண்மைய நாட்களில் விஜயம் செய்திருக்கிறேன். யுத்தத்தால் பாதிக்கப்பட்ட அம் மக்களை சந்தித்து இருக்கிறேன்.

அவர்கள் மிகவும் கஷ்டத்தில் இருக்கின்றனர். ஆனால் அவர்களுடன் சேர்ந்து தேநீர் அருந்தும் படியும் உண்ணும் படியும் மிகவும் அன்பாக கேட்டுக் கொள்கிறார்கள். நான் இச்சந்தர்ப்பங்களில் மிகவும் நெகிழ்ந்து போயிருக்கிறேன்.

இப்படியான தமிழ் மக்களை சில சக்திகள் எங்களிடம் இருந்து பிரித்து வைத்தன. மக்களால் ஜனநாயக ரீதியில் தெரிவுசெய்யப்பட்ட அரசு பிரச்சினைகள் ஏற்படும் போது சும்மா இருக்காது. தமிழர் விடயத்தி லும் அதுதான் நடந்தது.

ஆனால் இதில் தமிழர், சிங்களவர், முஸ்லிம்கள் என்கிற பாகுபாட்டுக்கு இடமே இல்லை. முன்பு கலகம் செய்த ஜே.வி.பியினர்கள் அடக்கப்பட்டார்கள் அவர்கள் சிங்களவர்களே.

எமது நாட்டில் பெரும்பான்மை சமயமாக பௌத்தம் இருந்தாலும் எல்லா சமயங்களும் சம உரிமைகளுடன் நடத்தப்பட வேண்டும். சமயங்களால் மாத்திரம் வாழ்வை வளப்படுத்த முடியாது. மக்களின் வறுமை ஒழிக்கப்பட வேண்டும். அப்பணியிலும் நான் ஈடுபட்டு வருகின்றேன். (ச–5)

# பி.பி.சி தமிழோசையின் அலைவரிசை மாற்றம்

(லண்டன்)

பி.பி.சி தமிழோசையின் அலைவரிசைகளில் நாளை முதல் மாற்றம் இடம்பெறுகின்றது. தமிழோசை நேயர்கள் மறு அறிவித்தல் வரும் வரை 41 மீட்டரில் 7,600 கிலோ ஹேர்ட்ஸ், 31 மீட்டரில் 9605 கிலோ ஹேர்ட்ஸ், 25 மீட்டரில் 11965 கிலோ ஹேர்ட்ஸ், 49 மீட்டரில் 6135 கிலோஹேர்ட்ஸ், ஆகிய சிற்றலை வரிசைகளிலும் இலங்கை நேயர்கள் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் பண்பலை வலையமைப்பு மூலமாகவும் கேட்கலாம். (ச–5)

# யாழில் நகைக்கடைகளில் விசித்திரமான திருட்டு

யாழ்ப்பாணத்திலுள்ள நகைக் கடைகளில் பட்டப் பகலில் நேரடியாக திருடும் சம்பவங்கள் இடம்பெற்று வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

அவ்வாறு நேற்றுத் திருடிய ஒருவர் வசமாக மாட்டிக்கொண்டார். இச்சம்பவம் தொடர்பாக தெரியவருவதாவது.

கஸ்தூரியார் வீதியிலுள்ள நகைக் கடை ஒன்றில் நகைகள் வாங்குவதற்கென இருவர் சென்று அங்கு சங்கிலிகளைப் பார்வையிட்டுக் கொண்டிருந்தபோது அவர்களில் ஒருவர் சங்கிலியை எடுத்துக்கொண்டு தப்பிச் சென்றுவிட்டார்.

இதனையடுத்து மற்றைய நபரை பிடித்த கடை ஊழியர்கள் அவரை பொலிசாரிடம் ஒப்படைத்தனர்.

தனக்கும் தப்பி ஓடியவருக்குமிடையில் எந்தவித தொடர்பும் இல்லை என அவர் தெரிவித்துள்ளார். இவ்வாறான சம்பவங்கள் அண்மைக்காலமாக இடம்பெற்று வருவதாக தெரிவிக்கப்பட்டது. (ச–5)

# ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு புதிய தலைமையகம்

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு பத்தரமுல்லையில் புதிய தலைமையகமொன்று நிர்மாணிக்கப்படவுள்ளதுடன் அதன் நிர்மாணப் பணிகள் சீன நிறுவனமொன்றிற்கு வழங்கப்படவுள்ளதாக ஜனாதிபதி செயலகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவினால் சுதந்திரக் கட்சிக்கென புதிய தலைமையகமொன்றை நிர்மாணிக்கும் நோக்கில் பத்தரமுல்லையில் காணியொன்று கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. அந்த இடத்திலேயே புதிய தலைமையகம் நிர்மாணிக் கப்படவிருக்கின்றது.

அம்பாந்தோட்டை துறைமுக நிர்மாணப் பணிகளை மேற்கொண்டுள்ள சீன நிறுவனமே ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கான புதிய தலைமையகத்தை நிர்மாணிக்கும் பணிகளையும் மேற்கொள்ளும்.

டெண்டர் கேள்விப்பத்திர நடைமுறைக்கு அப்பால் அதனைப் பொறுப்புக் கொடுக்குமாறு ஜனாதிபதி மகிந்தராஜபக்ஷ, கட்சியின் பொதுச் செயலாளர் மைத்திரிபால சிறிசேனவுக்கு உத்தரவிட்டுள்ளார். தற்போதைக்கு கொழும்பில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையகமாக செயற்படும் கட்டிடம் மிக விரைவில் விற்பனை செய்யப்படவுள்ளது. (ச–5)


## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் மாட்டின் லேனில் 2 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

தொடர்பிற்கு :–
0770452612
(2775)

## மணமகள் தேவை

யாழ் இந்து வேளாளர் 1975ம் ஆண்டு ஆரம்பத்தில் பிறந்தவர். நட்சத்திரம் பூசம். கிரகபாவம் குறைந்த மணமகனுக்கு கிரக பாவம் குறைந்த சிவந்த அழகிய மணமகள் (சைவபோசனம்) தேவை. மணமகன் லண்டனில் P.R உள்ளவர். விரைவில் வர உள்ளார். தொடர்பு :–
0213212961, 0779401092
(சி/1518)

## வேலை ஆட்கள் தேவை

ரயர் கடைக்கு வேலை தெரிந்தவர்கள், பழக விரும்புபவர்கள் தேவை.

தொடர்பு :–
P.K.S.P. ரயர் அன் வேர்க் சொப்
கே.கே.எஸ்.வீதி,
இணுவில்.
T.P :– 0777498793
(2770)




## தனியார் நிறுவனங்களை பதிவு செய்தல்

பெறுமதி மிக்க உங்கள் வியாபார நிறுவனத்துக்கான கௌரவத்தையும் நம்பிக்கையையும் பெற்றுக் கொள்வதற்காக உங்கள் தனியார் நிறுவனங்களை இலகுவான முறையில் பதிவு செய்து கொள்ள நாடுங்கள்,

VTL MANAGMENT
Daanston House
Colombo -03
T.P. 072 9994777
(சி/1384)

# இன்று ஒரு தகவல்

## ஒற்றுமை

ஒரு ஊரில் அண்ணன்,தம்பி இரண்டு பேர் இருந்தார்கள். அவர்களுடைய தந்தை கடைசியாக அவர்களுக்கு கென்று விட்டுட்டுப் போன சொத்து,

ஒரு மாமரம்,ஒரு பசுமாடு,ஒரு போர்வை. இவ்வளவு தான். இந்த மூன்றையும் அவர்கள் இருவரும் ஆளுக்கு பாதியாக பிரித்துக் கொள்ள வேண்டும்.

எப்படிப் பாகம் பிரிப்பது? எப்படி பங்கு போட்டுக் கொள்வது? எல்லாவற்றையும் சரிபாதியாக வெட்டி ஆளுக்கு அரைவாசியாகவா எடுத்துக் கொள்ள முடியும்? அண்ணன் காரன் ஒரு மக்கு. என்ன சொன்னாலும் தலையாட்டிக் கொண்டு போவான்.

தம்பிக்காரன் புத்திசாலி. இருந்தாலும் அந்தப் புத்தி சாலித்தனத்தை தவறாக உபயோகப்படுத்தக் கூடியவன்.

அந்தக் தம்பி அண்ணனிடம் சொன்னான்:

"அண்ணா, நம்முடைய அப்பா நமக்காக விட்டுட்டுப் போன சொத்தை நாமிருவரும் ஒற்றுமையாக இருந்து பிரித்துக் கொள்ளலாம். ஊரைக் கூட்டி பஞ்சாயத்து பண்ண வேண்டிய அவசியமில்லை"என்றான்.

"அப்படியானால் சரி,தம்பி நீயே அதைப் பங்கு போடு" என்றான் அண்ணன்.

தம்பி யோசித்தான் அதற்குப் பின் சொன்னான்:

"அண்ணா,நீங்கள் வயதில் மூத்தவர். அதனால் மூன்று விடயத்திலும் உங்களுக்குத் தான் முன்னுரிமை கொடுக்க வேண்டும். அதுதான் நியாயம். முதலில் அந்த மாமரத்தை எடுத்துக் கொள்வோம். அதில் அடிப்பாகம் தான் வலுவானது. அதனால் அந்த மரத்தின் அரைவாசிக்குக் கீழ் உள்ளதெல்லாம் அதாவது வேர் உட்பட அடிப்பாகம் முழுவதும் உங்களுக்கு. மேல் பாகம் வெறும் கிளையும் இலையுமாக இருப்பது எனக்கு இருக்கட்டும். அடுத்ததாக அந்தப் பசுமாடு.

எண்சாண் உடம்புக்கு சிரசே பிரதானம். அதனால் அந்த மாட்டின் தலைப்பாகம் உங்களுக்கு. பின்பக்கம் எனக்கு இருந்து விட்டுப் போகட்டும்.

அடுத்தது அந்தப் போர்வை. அதைப் பகல் முழுவதும் நீங்கள் வைத்துக் கொள்ளுங்கள். இரவு முழுவதும் நான் வைத்துக் கொள்கிறேன்" என்றான் தம்பி.

விபரம் புரியாத அண்ணன் சரியென்று ஒத்துக் கொண்டான்.

அதற்குப் பின் என்ன ஆயிற்று தெரியுமா?

அண்ணன் அந்த மரத்துக்கு உரமிட்டான். நீர் பாய்ச்சினான். தம்பி ஜாலியாக மரத்தின் மேல் உட்கார்ந்து பழத்தையெல்லாம் பறித்துக் கொண்டிருந்தான்.

அண்ணன் பசுமாட்டுக்குத் தீனி வைத்தான். புல்லை அள்ளி வந்து போட்டான். தண்ணீர் வைத்தான்.

தம்பி தன்பாட்டுக்கு பால் கறந்து கோப்பி போட்டு குடித்துக் கொண்டிருந்தான்.

அண்ணன் பகல் முழுவதும் அந்தப் போர்வையை சும்மா மடித்து வைத்திருந்தான்.

தம்பி ஜாலியாக ராத்திரியில் அதை வாங்கிப் போர்த்திக் கொண்டு தூங்கினான்.

இப்படியே நடந்து கொண்டிருந்தது.இதை பக்கத்து வீட்டுக்காரன் ஒரு நாள் கவனித்தான் நடப்பது நியாயமில்லை என்பதைப் புரிந்து கொண்டான் உடனே அந்த அண்ணனை இரகசியமாக ஒருநாள் தன் வீட்டுக்கு அழைத்துக் கொண்டு வந்து சில யோசனைகளை சொல்லி ,

இனிமேல் இப்படி நடந்து கொள் என்று சொன்னான். அவனும் சரியென்று சொல்லி தலையாட்டி விட்டுப்போனான். அதன் பின் என்ன ஆயிற்று தெரியுமா? அண்ணன் மரத்துக்கு உரம் வைப்பது,தண்ணீர் பாய்ச்சுவதை நிறுத்தினான். மரம் காய்க்கவில்லை. தம்பி முழிக்க ஆரம்பித்தான். பின் ஒரு கோடாரியை எடுத்து வந்து அடிமரத்தை வெட்ட ஆரம்பித்தான்.

தம்பி பதறிப்போய்"என்னண்ணே இப்படிசெய்கிறீர்கள்?" என்றான்.

"என்னுடைய பங்கில் நான் என்ன வேண்டுமானாலும் செய்வேன். உன்னுடைய பங்கிலேயா நான் வெட்டுகிறேன்?" என்று கேட்டான்.

மாட்டுக்குத் தீனி வைப்பதையும் தண்ணீர் வைப்பதையும் நிறுத்தினான். தம்பியால் பால்கறக்க முடியவில்லை. தவித்துப் போய் விட்டான்.

அந்தப் போர்வையை பகல் முழுவதும் அண்ணன் வைத்திருந்து இரவு நேரம் வருவதற்குள் அதை தண்ணீரில் நனைத்து தம்பியிடம் கொடுத்தான். அவனால் போர்த்திக் கொள்ள முடியவில்லை.

அதன் பின் அண்ணனிடம் சமரசம் செய்து கொண்டு நியாயமாக நடக்க ஆரம்பித்தானாம் அந்தத் தம்பி.

ஒற்றுமையாக வாழ்வதிலும் ஒழுங்கு முறை வேண்டுமென்பது இதிலிருந்து புரிகிறதல்வா!

ஒருத்தன் சொன்னான்:

"என்னுடைய எதிர் வீட்டுக்காரனிடம் நான் மிகவும் பிரியமாக நடந்து கொண்டேன். அவனை என்னுடன் கூடப்பிறந்த தம்பியாக நினைத்துப் பழகினேன். தம்பியென்று தான் கூப்பிடுவேன். அதுதான் இப்பொழுது வில்லங்கமாகி விட்டது" என்றான்.

"ஏன்?" என்று கேட்டேன்.

"அவனும் அதை நிஜமென்று நினைத்துக் கொண்டு இப்பொழுது என்னுடைய சொத்தில் பங்கு கேட்கிறான் சேர்" என்றான் மிகவும் வேதனையோடு.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் கைதானார்

அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் உதுல் பிரேமரத்ன பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சிறு கொத்தாவிற்கு அருகில் வைத்து நேற்று நண்பகல் அவர் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவரான உதுல் பிரேமரத்னவை கண்ட இடத்தில் கைது செய்யுமாறு கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றம் வழங்கிய ஆணைக்கு அமையவே அவர் நேற்று நண்பகல் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப் படுகின்றது.

இதேவேளை கடந்த 14 ஆம் திகதி இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தின் போது பொலிஸார் மீது தாக்குதல் நடத்திய மற்றும் அமைச்சின் சொத்துக்களுக்கு சேதம் விளைவித்தமை போன்ற குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்த பல்கலைக் கழக மாணவர்கள் 21பேரும் நேற்று பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ஸ்ரீ-2)

# வல்வை அணி காலிறுதிக்கு தெரிவு

வல்வெட்டித்துறை திக்கம் சிவானந்தா விளையாட்டு கழகம் நடத்தும் உதைப்பந்தாட்ட போட்டியின் இரண்டாவது சுற்றுப் போட்டியில் வல்வை விளையாட்டுக் கழகமும் ஆதிசக்தி விளையாட்டுக் கழகமும் மோதிக் கொண்டன.

இதில் இரு அணிகளும் 2:2 என்ற விகிதத்தில் சமநிலையைப் பெற்றன. பின் பனால்ட்டி முறையில் 4:2 கோல் கணக்கில் வல்வை அணி வெற்றி பெற்று காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

(ஸ்ரீ-63)

# வீட்டுத்திட்டம்

கண்டாவளை பிரதேச செயலகத்துக்குட்பட்ட கல்மடுநகர் கிராம அலுவலர் பிரிவில் முதற்கட்டமாக 120 பேருக்கு நேப் வீட்டுத்திட்டம் வழங்கப்பட்டுள்ளது.

இவர்களுக்கான வீடுகட்டுவதற்கான வேலைகள் இடம்பெற்றுவரும் வேளையில் இவ்வீட்டுத்திட்டத்திற்கு மேலும் 15 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (ஸ்ரீ-2)

# பொதுக் கிணறுகளை ஆழமாக்கும் பணி

கல்மடு நகரில் உள்ள பொதுக்கிணறுகளை ஆழமாக்கி கட்டும் பணியினை சர்வோதய நிறுவனத்தினர் ஆரம்பித்துள்ளனர்.

இதன் அடிப்படையில் முதலாவதாக இராமநாதபுரம் கிழக்கு அ.த.க.பாடசாலை கிணற்றினை ஆழமாக்கி கட்டும் பணியை செய்து வருகின்றனர்.

இதே போன்று இக்கிராமத்தில் உள்ள பொதுக்கிணறுகள் யாவும் ஆழப்படுத்தி கட்டித்தருவதாக சர்வோதய நிறுவன செயற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (ஸ்ரீ-2)

# இராசி பலன்

30.10.2010
(ஐப்பசி 13, சனிக்கிழமை)
அட்டமி பின்னிரவு 2.33 மணிவரை
பூசம் முன்னிரவு 10.32 மணிவரை
விசாகம் முன்னிரவு 8.10 மணிவரை
இராகுகாலம் 9.03-10.33 மணிவரை
சுபநேரம் 3.03-4.33 மணிவரை

**மேடம்** மனதில் இனம்புரியாத சந்தேகம் குடி கொள்ளும், தாய் வழி அனுகூலமுண்டு, தொலைபேசி வழித் தகவல் ஆச்சரியப்பட வைக்கும், வாகன சுகமுண்டு.

**இடபம்** விலையுயர்ந்த பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள், பொழுதுபோக்கு விடயங்களில் அதிக ஆர்வம் காட்டுவீர்கள், சகோதர வழி அனுகூலமுண்டு.

**மிதுனம்** ஆன்மீக நாட்டம் அதிகரிக்கும், நண்பர்கள் மத்தியில் நல்லபெயர் கிட்டும், தொழில் முயற்சி வெற்றி தரும்,மனதில் உற்சாகம் அதிகரிக்கும், சுபசெலவுண்டு.

**கடகம்** குடும்பச் செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள்,சொன்ன சொல்லைக் காப்பாற்ற நண்பர்கள் உறுதுணை புரிவர், கற்பனை மிகுதியுண்டு, போசன நன்மையுண்டு.

**சிங்கம்** திடீர் பயணத்தால் தித்திக்கும் செய்தியொன்று வந்து சேரலாம், சுப செலவுகள் அதிகரிக்கும், வெளி வட்டாரப் பழக்கவழக்கம் அதிகரிக்கும், அதிகாரிகள் ஒத்துழைப்பு வழங்குவர்.

**கன்னி** பொன்னான நாள், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணப்படும், மங்கல நிகழ்ச்சிகள் மனையில் நிகழ்வதற்கான அறிகுறிதோன்றும், பேரும் புகழும் அதிகரிக்கும் நாள்.

**துலாம்** மதிப்பும் மரியாதையும் உயரும், கொடுத்த வாக்குறுதியை காப்பாற்ற வேண்டுமென்ற எண்ணம் உருவாகும், செல்வநிலை உயர கடவுளை வழிபடவேண்டியநாள்.

**விருச்சிகம்** வருமானம் திருப்தி தரும்,தொழில் வளர்ச்சிக்கு தொலைபேசித் தகவல் உறுதுணை புரியும், குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும், பிரயாண நன்மை உண்டு.

**தனுசு** பிரியமான சிலரிடம் யோசித்து பேசும் சூழ்நிலை உருவாகலாம், குடும்பத்தாரின் யோசனைகளைக் கேட்டு நடப்பது நல்லது, பிரயாண பயமுண்டு,பணக்குறைவு ஏற்படும்.

**மகரம்** அதிஷ்டமான தினம், எடுத்த காரியம் கைகூடும், நண்பர்கள் சந்திப்பு நன்மையளிக்கும், பணவரவு திருப்திகரமாக அமையும், உற்சாகமான நாள்.

**கும்பம்** பிள்ளைகளால் பெருமைகள் உருவாகும், பணவரவு அதிகரிக்கும், அடிப்படை வசதி வாய்ப்புக்களை பெருக்கிக் கொள்வீர்கள், எதிரிகள் உதிரியாகும் நாள்.

**மீனம்** கோரிக்கைகள் நிறைவேற கோயிலுக்கு செல்ல வேண்டிய நாள், வருமானம் திருப்திகரமாக அமையும், குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும், புத்திரர் வழியில் அனுகூலமுண்டு.

வளவன்

# செயலமர்வு

யாழ்.மாவட்ட முதியோர்களின் நலன்களைப் பேணுவதற்கான அமைப்பின் விசேட செயலமர்வு நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 4 .30 மணிமுதல் 7 மணிவரை மானிப்பாய் பிரதேச சபை மண்டபத்தில் இலங்கை வங்கியின் யாழ். மாவட்ட முன்னாள் முகாமையாளர் அ.கணேசமூர்த்தி தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக ஓய்வு பெற்ற பருத்தித்துறை ஆதார வைத்திய சாலை பொறுப்பதிகாரி வைத்திய கலாநிதி எஸ். கதிர வேற்பிள்ளை கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

கொழும்பில் செயற்பட்டு வரும் முதியோர் சுக வாழ்வுச் சங்கம் யாழ்.மாவட்டத்தில் தனது செயற்பாடுகளை விஸ்தரிக்கும் முகமாக இச்செயலமர்வு விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

இறுதிக் காலத்தில் முதியோரின் நல்வாழ்வுக்கும் மகிழ்ச்சிக்குமாக யாழ்.மாவட்ட வைத்தியசாலைகளில் முதியோருக்கான பிரத்தி யோக வசதிகளை ஏற்படுத்தவதும் அவர்களுக்கு ஏற்படும் நோய்க ளுக்கு சர்வதேச நிபுணர்களின் ஆலோசனைகளை யாழ்ப்பாண முதியோர்களுக்கு பெற்றுக்கொடுப்பதற்கு இம்மன்றம் நடவடிக்கை எடுக்கவுள்ளதால் சகல முதியோர்களையும் இச் செயலமர்வில் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-134)

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | மருதனார்மடம் |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 100 | 100 |
| உருளைக்கிழங்கு | 90 | 110 | 100 |
| பச்சைமிளகாய் | 90 | 120 | 90 |
| தக்காளி | 100 | 120 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 50 | 40 |
| கோவா | 60 | 80 | 60 |
| கரட் | 80 | 90 | 50 |
| பூசணி | 40 | 50 | 50 |
| புடோல் | 60 | 60 | 40 |
| வாழைக்காய் | 40 | 50 | 40 |
| சின்ன வெங்காயம் | 110 | 100 | 100 |
| பெரிய வெங்காயம் | 80 | 120 | 80 |
| பாகற்காய் | 140 | 140 | 120 |
| வெண்டிக்காய் | 60 | 70 | 50 |
| கருணைக் கிழங்கு | 45 | 60 | 50 |
| பயற்றங்காய் | 90 | 100 | 100 |
| லீக்ஸ் | 120 | 120 | 120 |
| பீற்றூட் | 40 | 60 | 40 |
| கறிமிளகாய் | 100 | 140 | 120 |
| முருங்கைக்காய் | 140 | 160 | 120 |
| போஞ்சி | 120 | 130 | 140 |
| கத்தரிதம்புள்ள | 60 | 80 | 80 |
| கீரை - 1 பிடி | 30 | 30 | 30 |
| தேசிக்காய் | 100 | 120 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 40 | 35-50 |

# கனடாவுக்கு தமிழர்கள் வழங்கியுள்ள பங்களிப்பு மகத்தானதாகும்

## அந்நாட்டு பாராளுமன்ற உறுப்பினர் தெரிவிப்பு



கனடாவுக்கு குடியர்ந்துள்ள தமிழர்கள் நம் நாட்டுக்கு வழங்கியுள்ள பங்களிப்பு மகத்தானது. அவர்கள் மீதான விமர்சனங்களை ஒதுக்கித் தள்ளிவிட்டு அவர்களை அரவணைக்க கனடா முன்வர வேண்டும் என்று கனேடிய பாராளுமன்ற உறுப்பினரான பெரிக் லீ என்பவர் அந் நாட்டுப் பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் வலியுறுத் தியிருக்கின்றார்.

கடந்த 1940 ஆம் ஆண்டில் முதலாவது தமிழர் கனடாவுக்கு வருகை தந்ததாகக் குறிப்பிடும் அவர் அன்று தொடக்கம் இன்று வரை சுமார் இரண்டரை இலட்சத்துக்கும் அதிகமான தமிழர்கள் கனடாவுக்கு வருகை தந்திருப்பதாகவும் அவர்கள் மூலமாக கனடாவின் உட்கட்டமைப்பு உள்ளிட்ட பல துறைகள் மேம்படுத்தப்பட்டுள்ளதாகவும் கனடாவின் பல் கலாசார சூழலுக்கு தமிழர்கள் வழங்கியுள்ள பங்களிப்பை இலகுவில் மறைத்து விட முடியாது என்றும் அவர் தொடர்ந்தும் வலியுறுத்தியுள்ளார்.

மூன்று தசாப்தங்களுக்கு மேலான உள்நாட்டுயுத்த வன்முறைகள் காரணமாக நொந்து போயிருக்கும் அந்த மக்களை இனியும் ஊடகங்கள் மற்றும் தேவையற்ற விமர்சனங்கள் மூலமாக நோகடிக்காது அவர்களை நாம் திறந்த மனதுடன் ஏற்றுக்கொள்ள முன்வர வேண்டும் என்றும் அவர் மேலும் வலியுறுத்தியுள்ளார்.

(ஸ்ரீ-2)

# நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை தனியார் மயமாக்கப்படமாட்டாது

## அமைச்சர் தினேஷ் குணவர்த்தன தெரிவிப்பு



(கொழும்பு)

நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையைத் தனியார் மயமாக்கும் எவ்வித எண்ணமும் இல்லையென நீர் வழங்கல் வடிகாலமைப்பு அமைச்சர் தினேஷ் குணவர்தன தெரிவித்துள்ளார்.

அமைச்சில் நேற்று முன்தினம் நடைபெற்ற கருத்தரங்கொன்றில் அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையினால் தற்போது முன்னெடுக்கப்படுகின்ற, அதே போலப் புதிதாக ஆரம்பிக்க எதிர்பார்த்துள்ள செயற்றிட்டங்கள் தொடர்பில் இதன் போது கருத்துகள் தெரிவிக்கப்பட்டன.

நீரைப் போத்தல்களில் அடைத்தல், சிறுநீரக நோயாளர்களுக்கு நீரை விநியோகித்தல் போன்ற ஒன்றிரண்டு திட்டங்கள் தம் வசம் இருப்பதாகவும் அமைச்சர் இங்கு தெரிவித்தார்.

நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையை நூறு வீதம் அரசாங்க நிறுவனமாக முன்னெடுக்க எதிர்பார்த்துள்ளதாகவும் அதன் வருமானம் இலாபம் என்பன தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையையே சேருமெனவும் அமைச்சர் மேலும் குறிப்பிட்டார்.

(ஸ்ரீ-2)

# பாடசாலைகளுக்கிடையிலான உதைபந்தாட்ட இறுதிப் போட்டிகளில் சம்பியனான அணிகள்

(கரவெட்டி)

வடமராட்சி கல்விவலய பாடசாலைக் கிடையில் நேற்று முன்தினம் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மைதானத்தில் பி.ப 2 மணிக்கு இடம்பெற்ற உதைபந்தாட்ட இறுதிப் போட்டிகளில் 16 வயது ஆண்,18 வயது இரு பாலாருக்குமான போட்டிகளில் முறையே இமையாணன் அ.த.க. பாடசாலை, கரவெட்டி விக்கேஸ்வராக் கல்லூரி,ஹாட்லிக் கல்லூரி அணிகள் வெற்றி பெற்று வட மராட்சி கல்வி வலய சம்பியனாகின.

16வயதுப்பிரிவு ஆண்களுக்கான போட்டியில் தேவரையாளி இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து இமையாணன் அ.த.க. அணி மோதியது.

இரு அணிகளும் சிறப்பான ஆட்டத்தினை இறுதிவரை வெளிப்படுத்தினர் . இறுதியில் 1:0 என்ற கோல் கணக்கில் இமையாணன் அ.த.க.வெற்றி பெற்றது.

18 வய்துப் பிரிவு பெண்களுக்கான போட்டியில் சென்.தோமஸ் றோ.க.த.க.வை எதிர்த்து கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி அணி மோதியது.

இரு அணி வீராங்கனைகளும் விறுவிறுப்பாக இறுதிவரை ஆட்டத்தை வெளிப்படுத்தினர்.இறுதியில் போட்டி சமநிலையில் முடிவுற்றது.

இறுதியில் வெற்றியைத் தீர்மானிக்க பனால்டி உதை வழங்கப்பட்டன.4:4 என்ற கோல் கணக்கில் இரு அணிகளும் பெற்றன. மீண்டும் ஒரு சந்தர்ப்பம் வழங்க விக்னேஸ் வீராங்கனை தமது அணிக்காக கோல் ஒன்று போட்டு வெற்றியை தமதாக்கிக் கொண்டார்.

18 வயது ஆண்களுக்கான போட்டியில் நெல்லியடி மத்திய மகா வித்தியாலய அணியை எதிர்த்து ஹாட்லிக் கல்லூரி அணி மோதியது.

5:0 என்ற கோல் கணக்கில் பருத்தித்துறை ஹாாட்லிக் கல்லூரி அணி வெற்றி பெற்று சம்பியனானது.

(ஸ்ரீ-24)

# யுத்தத்தால் இழந்தவற்றை உடனடியாக பெறமுடியாது

## பிரதியமைச்சர் முரளிதரன் தெரிவிப்பு

கடந்த 30 வருடங்களாக பல இன்னல்களை அனுவித்து வந்தோம். நாம் இழந்தவற்றை ஒரு சில மாதங்களில் பெற்றுவிட முடியாது.கொஞ்சம் கொஞ்சமாகத்தான் எல்லாமே நடைபெறும். கிழக்கில் இப்போது தான் அனைத்து மக்களும் குடியமர்த்தப்பட்டு மகிழ்ச்சியான, திருப்தியான சூழல் உருவாகியிருக்கிறது.வடக்கில் கடந்த எட்டு ஒன்பது மாதங்ங்ளாகத்தான் தீவிரமான மீள் குடியேற்றம் நடைபெற்று வருகிறது. விரைவில் எஞ்சியுள்ள அனைவரையும் மீளக் குடியமர்த்துவோம் என்று மீள்குடியேற்ற பிரதி அமைச்சர் வி.முரளிதரன் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை வவுனியாவிலுள்ள வலயம் 4 இடைத் தங்கல் முகாமிலுள்ள மக்களைச் சந்தித்து அவர்களுடைய குறைகள் மற்றும் தேவைகளைக் கேட்டறிந்து கொள்ளும் நிகழ்வில் பேசுகையி லேயே பிரதி அமைச்சர் இவ்வாறு தெரிவித் தார்.

மேலும் அங்கு உரையாற்றிய அவர், வன்னி மக்களுக்கு இராணுவம், பொலிஸ் சார்ந்து இன்னமும் ஒரு விதமான அச்சம் இருக்கிறது. கிழக்கில் அந்த நிலை மாறியிருக்கிறது. நீங்களும் நெருக்கமாகவும் அச்சமின்றியும் பழகும் வாய்ப்பு உங்களுக்கு உள்ளது. அதன்மூலம் நீங்களும் விரைவில் மகிழ்ச்சியான வாழ்வை வாழ ஆரம்பிக்க வேண்டும் என்பதே எம்முடைய விருப்பம் .

மீளக்குடியமர்த்துவதில் இப்போது கண்ணிவெடி அகற்றுதலே பிரச்சினையாக உள்ளது. எனவே விரைவாக இலட்சக்கணக்கில் புதைக்கப்பட்டுள்ள கண்ணிவெடிகளை அகற்றியாக வேண்டும். அதற்கு உங்களுடைய ஒத்துழைப்பும் தேவை.

அரசசார்பற்ற நிறுவனங்கள் இப்பணியில் மிகவும் மெதுவாகவே ஈடுபட்டு வருகின்றன. அவர்கள் ஒரு கிலோமீற்றரை ஒரு மாதத்தில் துப்புரவு செய்தால் இராணுவத்தினர் 20 கிலோமீற்றரைத் துப்புரவு செய்வார்கள். அதற்காக அதிகளவு இராணுவத்தினர் தேவைப்படுகிறார்ள். அந்தவகையில் இப்போதுள்ள 5 நலன்புரி நிலையங்களை 2ஆகக் குறைக்கத் திட்டமிட் டுள்ளோம். எனவே நீங்கள் வலயம் 0 மற்றும் 01க்குச் சென்று உங்களது பிரதேசங்களில் கண்ணி வெடிகள் அகற்றப்படும் வரை தங்கி யிருங்கள்.

புதுக்குடியிருப்பு, புதுமாத்தளன், முள்ளிவாய்க்கால் உள்ளிட்ட பகுதிகளில் அதிகளவான வெடிகள் புதைக்கப்பட்டுள்ளன. இவற்றை அகற்றுவதற்கு அதிகளவான இராணுவத்தினர் ஈடுபடுத்தப்படவுள்ளனர். நிர்வாகச் சிக்கல்களைத் தவிர்ப்பதற்காக முகாம்களைக் குறைக்கவுள்ளோம்.

கடந்த வாரத்தில் மூதூரில் வெடிக்காத வெடி பொருள் ஒன்று வெடித்ததில் ஒரு சிறுவன் பலியானதுடன் மேலும் பலர் காயமடைந்திருந்தனர். அதுபோன்றதொரு சம்பவம் இனிமேல் நடந்துவிடக்கூடாது .அதனை நான் ஒருபோதும் அனுமதிக்கமாட்டேன். யுத்த காலத்தில் ஏற்பட்ட உயிரிழப்புக்களுக்கு அப்பால் இன்றைய நிலையில் ஒரு பாதிப்பு ஏற்பட்டு விடக்கூடாது என்பதில் மிகவும் கவனமாக இருக்கிறோம் என்றார்.

(ஸ்ரீ-43)




யாழ்.பாதுகாப்பு படைகளின் தலைமையகத்தினால் யாழ்.மாவட்ட வைத்தியசாலைகளுக்கு சத்திரசிகிச்சைக்குரிய படுக்கைகள் மற்றும் மருத்துவ படுக்கைகள் வழங்கும் நிகழ்வு நேற்று யாழ்.பாதுகாப்புப் படைகளின் தலைமையலுவலகத்திலுள்ள மக்கள் தொடர்பு அலுவலகத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் யாழ்.அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார், வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன், யாழ்.கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மகிந்த ஹத்துருசிங்க ஆகியோர் உரையாற்றுவதையும் படுக்கைகள் கையளிக்கப்படுவதையும் நிகழ்வில் கலந்துகொண்டவர்களையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:-எஸ்.கரன்)

# தங்கக் கட்டிகளை கடத்திச் சென்ற இலங்கையர் சென்னையில் கைது

ஒவ்வொன்றும் இந்தியப் பெறுமதியில் 70 இலட்சம் ரூபாய் வரை தேறக் கூடிய 10 தங்கக் கட்டிகளை கொழும்பில் இருந்து கடத்திச் சென்ற இலங்கைப் பிரஜை ஒருவர் இந்தியாவின் தமிழ்நாடு மாநிலத்தில் உள்ள சென்னை விமான நிலையத்தில் வைத்து சுங்க அதிகாரிகளால் நேற்று கைது செய்யப்பட்டுள்ளார். தங்கக் கட்டிகள் ஒவ்வொன்றும் ஒரு கிலோ வரை இருக்கும் என்று தெரிவிக்கப்படு கிறது. அப்துல்லா வயது -42 என்பவரே இது தொடர்பாக கைது செய்யப்பட்வர் ஆவார்.

(ஸ்ரீ-2)



இருபாலை வீதியில் அமைந்துள்ள கைத்தொழில் கூட்டுறவுச் சங்கத்தின் புடைவை நெசவு கைத்தொழில்பேட்டையை வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி நேரடியாகச் சென்று பார்வையிட்டதுடன் அங்குள்ள குறைநிறைகளைக் கேட்டறிந்து ஆராய்வதைப் படங்களில் காணலாம். (படங்கள்:-என்.குமார்)

# நோர்வேயின் தலைநகரில் மட்டும் 3800 இலங்கை அகதிகள் உள்ளனர்

## அந்நாட்டு புள்ளிவிபரத் திணைக்களம் தெரிவிப்பு

நோர்வேயின் தலைநகர் ஒஸ்லோவில் மாத்திரம் 3ஆயிரத்து 800 இலங்கையர்கள் அகதி அந்தஸ்து பெற்று வாழ்கின்றார்கள் என்று அந்நாட்டு புள்ளிவிபரவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது. அந்நாட்டில் வாழும் அகதிகள் எண்ணிக்கையை இத்திணைக்களம் கணக்கெடுத்து விபரம் வெளியிட்டுள்ளது:

அவ்விபரத்திலேயே ஒஸ்லோவில் மாத்திரம் இலங்கையர்கள் 3ஆயிரத்து 800 பேர் அகதி அந்தஸ்து பெற்று வாழ்கின்றார்கள் என்று ஒஸ்லோவில் வாழும் வெளிநாட்டு அகதிகளில் இலங்கையரும் கணிசமான தொகையினர் என்றும் திணைக்களம் அறிவித்துள்ளது.

நோர்வேயின் பல நாடுகளில் இருந்தும் ஒட்டுமொத்தமாக ஒரு இலட்சத்து 51 ஆயிரம் பேர் அகதி அந்தஸ்து பெற்று வாழ்கின்றார்கள் என்று இவ்விபரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்நாட்டு சனத் தொகையில் 3.1 சதவீதத்தினர் இவ்வகதிகள் என்றும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

# சோமாலியாவில் உளவு பணியில் ஈடுபட்ட குற்றத்திற்காக 2 சிறுமிகளுக்கு மரணதண்டனை

உளவு பணியில் ஈடுபட்ட குற்றச்சாட்டின் பேரில் இரண்டு சிறுமிகளுக்கு சோமாலிய அல் சஹாப் அமைப்பு மரண தண்டனை நிறைவேற்றியுள்ளது. பொதுமக்கள் முன்னிலையில் இந்தத் தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது. சோமாலியாவின் பெலிட்வைன் நகரில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தமது அமைப்பிற்கு எதிரான தகவல்களை திரட்டியதாகவும் உளவுப் பணியில் ஈடுபட்டதாகவும் கொல்லப்பட்ட சிறுமிகள் 15 மற்றும் 18 வயதுகளை உடையவர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

சோமாலியாவின் பல பகுதிகளை அல் கொய்தா ஆதரவு அமைப்பான அல் சஹாப் அமைப்பு கட்டுப்படுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

ஒலி பெருக்கி மூலம் தண்டனை தொடர்பாக கிராம மக்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் இந்தத் தண்டனையை அனைவரும் நேரில் பார்வையிடவேண்டுமெனவும் உத்தரவிடப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. உயிரிழந்தவர்கள் அப்பாவிகள் என பிரதேச மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

துப்பாக்கிப் பிரயோகம் செய்து இவர்கள் கொல்லப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஸ்ரீ)

# ஹைகோப் ஆயுத ஊழல் வழக்கில் இரண்டாம் பிரதிவாதிக்கு ஐந்து வருட சிறைத்தண்டனை

ஹைகோப் நிறுவனத்தின் ஊடாக ஆயுத ஊழலில் ஈடுபட்டதாக கூறி சரத்பொன்சேகாவுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட மனுவில் இரண்டாம் பிரதிவாதியாகிய ஹை கோப் நிறுவன பணிப்பாளர் வெலிங்டன் டீ ஹேராட்டுக்கு கொழும்பு மேல் நீதிமன்றம் 5 வருட கடூழிய சிறைத்தண்டனையை விதித்துள்ளது.

தமது குற்றத்தை ஏற்றுக் கொண்ட நிலையிலேயே அவருக்கு இந்தத் தண்ட னை விதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்கிடையில் இந்த வழக்கின் பிரதான பிரதிவாதியாகிய தனுன இன்னும் தலைமறைவாகியுள்ளார். சரத்பொன்சேகா இந்த வழக்கின் மூன்றாவது பிரதிவாதியாக குறிப்பிடப்பட்டுள்ளார்.

இதனைத் தவிர சரத் பொன்சேகாவின் உதவியாளராக செயற்பட்ட சேனக சில்வாவை கொழும்பு நீதவான் நீதிமன்றம் நேற்று விடுதலை செய்துள்ளது.

அரசாங்கத்திற்கு எதிராக சதியில் ஈடுபட்டதாக குற்றம் சுமத்தப்பட்டு சேனக டி சில்வா விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார். (ஸ்ரீ-2)

# அம்பாந்தோட்டை திஸ்ஸ மகாராம பகுதியில் கண்டெடுக்கப்பட்ட தமிழ்க்கல்வெட்டு மாயம்!

(கொழும்பு)

அம்பாந்தோட்டை மாவட்டத்தின் திஸ்ஸ மஹாராமப் பகுதியில் கண்டுபிடிக்கப்பட்ட தமிழ் கல்வெட்டு மாயமாக மறைந்துள்ளதாக இலங்கை தொல்பொருளியல் திணைக்கள தகவல்கள் தெரிவிக்கின்றன.

தமிழ்மொழியின் முன்னைய வடிவமான பிராமி எழுத்து வடிவத்தில் அமைந்திருந்த குறித்த கல்வெட்டை ஜெர்மனியைச் சேர்ந்த நிபுணரொருவர் கண்டுபிடித்து இலங்கையின் தொல்பொருளியல் திணைக்களத்திடம் ஒப்படைத்திருந்தார்.

திஸ்ஸமஹாராமையின் கொடவாய பிரதேசத்தில் அமைந்திருக்கும் பௌத்த விகாரையொன்றினை அண்மித்த கற்பாறையொன்றிலிருந்து பிரஸ்தாப கல்வெட்டு கண்டுபிடிக்கப்பட்டிருந்தது.

அம்பாந்தோட்டை புராதன துறைமுகத்துடன் தமிழர்கள் தொடர்பு வைத்திருந்தமைக்கான ஆதாரமாக குறித்த கல்வெட்டு திகழ்வதாக தொல்பொருள் துறை நிபுணர்கள் பலரும் கருத்துத் தெரிவித்திருந்த நிலையில் அது தற்போது மாயமாக மறைந்து போயுள்ளது. (ஸ்ரீ-2)

# வவுனியாவில் புதிய தொழிற்சாலைகள்; 4 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்பு

(கொழும்பு)

வவுனியாவில் புதிதாக நிர்மாணிக்கப்படவுள்ள தொழிற்சாலைகள் காரணமாக அம்மாவட்டத்தைச் சேர்ந்த சுமார் நான்காயிரம் பேருக்கு தொழில் வாய்ப்புக்கள் வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில் வவுனியாவில் முதலீடுகளை மேற்கொள்ளவுள்ள முன்னணி நிறுவனங்களின் பிரதிநிதிகள் நேற்று முன்தினம் காலை வவுனியாவிற்கு விஜயம் செய்து சிவில் நிர்வாக அதிகாரிகளையும் பாதுகாப்பு படையினரையும் சந்தித்ததுடன் புதிய தொழிற்சாலைகள் நிர்மாணிக்கப்படவுள்ள இடங்களையும் சென்று பார்வையிட்டனர்.

அத்துடன் மாவட்ட செயலகத்தில் வட மாகாண ஆளுநர், அரச அதிபர் மற்றும் திணைக்கள தலைவர்களுடனான சந்திப்பின் போது பல விடயங்கள் குறித்து இதன் போது ஆராயப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் வழிகாட்டலின் கீழ் முன்னெடுக்கப்படவுள்ள இந்த தொழிற்சாலை நிர்மாணப் பணிகள் முதலீட்டு சபையினூடாக மேற் கொள்ளப்படவுள்ள நிலையில் புதிய தொழிலகங்கள் செயற்படும் போது வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த சுமார் நான்காயிரம் பேருக்கு வேலை வாய்ப்பு வழங்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இவ்வாறு நிர்மாணிக்கப்படவுள்ள தொழிற் சாலைகளில் பெரும்பாலானவை ஆடைத் தொழிற்சாலைகளாக அமையும் எனத் தெரி விக்கப்படுகின்றது.

# கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

சர்வதேச மார்க்சிய குழுவின் ஏற்பாட்டில் மாபெரும் ஒக்டோபர் புரட்சியின் 93ஆவது நினைவுதினத்தை முன்னிட்டு நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு "ஒக்டோபரை பாதுகாத்தல்" எனும் தலைப்பிலான கலந்துரையாடல் இலக்கம் 33, முதலாம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் நடைபெறவுள்ளது.

இவ்விடயம் பால் ஈர்க்கப்பட்ட அனைவரையும் பங்குபற்றும் படி சர்வதேச மார்க்சிய குழு அழைத்துள்ளது. (ஸ்ரீ-2)



யாழ்.பொதுநூலகத்தில் கடந்த 23 ஆம் திகதி நடைபெற்ற அசௌகரிய சூழ்நிலை தொடர்பான கலந்துரையாடல் நேற்று யாழ்.பொது நூலகத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுகைத் தொழில் அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா உரையாற்றுவதையும் அருகில் யாழ். மாநகர முதல்வர் திருமதி யோ. பற்குணராசா, யாழ்.மாநகர சபை ஆணையாளர் மு. செ.சரவணபவ ஆகியோர் அமர்ந்திருப்பதையும் கலந்து கொண்ட நூலக உறுப்பினர்கள் மற்றும் மாநகர சபையினர்கள், இராணுவத்தினர், பொலிஸார், புத்திஜீவிகள் ஆகியோரையும் படங்களில் காணலாம். (படங்கள் :- எஸ்.கரன்)



அளவெட்டி மகாஜனசபை கலைஞர்வட்டத்தினால் பூரணைதினத்தில் நடத்தப்படும் நிலாக்கால கலைநிகழ்வில் நடைபெற்ற பட்டிமன்ற நிகழ்வினையும் சகுந்தலை நிருத்திய நாடக நிகழ்வினையும் தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி மாணவிகளின் குழு இசைநிகழ்வினையும் படங்களில் காணலாம்.

## பாராட்டி கௌரவிப்பு

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை பழவத்தை அருள்மிகு காளியம்பாள் தேவஸ்தானத்தில் நவராத்திரி காலத்தினை முன்னிட்டு 10 நாட்கள் நடைபெற்ற ''சக்தி மகத்தும்'' எனும் தலைப்பில் மதுரகவி காரை எம்.பி. அருளானந்தன் சிறப்பு சொற்பொழிவாற்றினார்.

இதற்கமைய தேவஸ்தானமும் பழவத்தை வாழ் மக்களும் இணைந்து ''சைவத் தமிழ்மணி'' என்ற பட்டத்தினை வழங்கினர்.

அதேவேளை ஆலய பிரதம குரு சிவ ஸ்ரீ பாலகிருஷ்ணக் குருக்களுக்கு சிவாகம பூஷணம் எனும் கௌரவமும் தேஸ்தான தலைவர் பொ. சின்னையாவுக்கு சக்தி உபாசகர் என்ற பட்டமும் வழங்கி கௌரவிக்கப்பட்டார். (ஸ்ரீ-2)




## தம்பகாமம் மாமுனை வீதியை போக்குவரத்துக்கு திறக்க வேண்டும்

### அப்பகுதி மக்கள் கோரிக்கை

(திருநெல்வேலி)

வடமராட்சி கிழக்கு மாமுனைப் பகுதிக்கும் பளைப்பகுதிக்கும் இடையிலான தம்பகாமம் மாமுனை வீதியை மக்கள் போக்குவரத்துக்கு அனுமதிக்க வேண்டும் என இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இவ்வீதியானது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அமரர் சிவநேசனால் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட வீதியாகும்.

தற்போது பாதுகாப்புக் காரணங்களைக் காட்டி இவ்வீதி ஊடான போக்குவரத்து தடுக்கப்பட்டுள்ளது. இவ்வீதியைத் திறப்பதன் ஊடாக பச்சிலைப்பள்ளி பகுதி மக்களுக்கும் வடமராட்சி கிழக்குப் பகுதி மக்களுக்கும் இடையிலான போக்குவரத்தின் ஊடாக பல்வேறு நன்மைகள் ஏற்பட வாய்ப்புள்ளது.

குறிப்பாக இப்பகுதியில் உள்ள விவசாயிகளும் மீனவர்களும் இதன் ஊடாக நன்மையடைய வாய்ப்புள்ளது.

அத்தோடு தமது உற்பத்திப் பொருட்களை சந்தைப்படுத்த இலகுவான வழி இதன் மூலம் ஏற்படும் என்பது குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-43)

## செயலமர்வு

(அல்வாய்)

வடமராட்சி வலய ஆரம்பக் கல்வி ஆசிரியர்களுக்காக செயற்பாட்டுடன் கூடிய கற்பித்தல் முறைமைகள் தொடர்பான கலந்துரையாடல் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

இதற்கமைய இன்றும் நாளையும் காலை 8 மணி தொடக்கம் பிற்பகல் 4.30 மணி வரை கணிதபாட செயமலர்வு யா/வேலாயுதம் மகாவித்தியாயலயத்தில் நடைபெறும்.

இச்செயலமர்விற்கு வடமராட்சி வலயத்தில் உள்ள சகல பாடசாலைகளில் இருந்தும் ஒரு ஆசிரியரையாவது தவறாது அனுப்பி வைக்குமாறு வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராஜா பாடசாலை அதிபர்களுக்கு அறிவித்துள்ளார். (ஸ்ரீ-19)

## சுயதொழில் பயனாளிகளுக்கான வாழ்வாதார உதவிவழங்கும் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தினால் சுயதொழில் பயனாளிகளுக்கான வாழ்வாதார உதவிகள் வழங்கும் நிகழ்வு இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு இந்நிறுவன கேட்போர் கூடத்தில் தலைவர் பேராசிரியர் ப.சிவநாதன் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுகைத் தொழில் அபிவிருத்தி அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா, சிறப்பு விருந்தினர்களாக, யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் மற்றும் தெல்லிப்பழை பிரதேச செயலக பிரதேச செயலர் எஸ்.முரளிதரன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

கௌரவ விருந்தினர்களாக நல்லூர் பிரதேச செயலக உதவித்திட்டமிடல் பணிப்பாளர் இ.சுரேந்திரநாதன் மற்றும் சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலக அபிவிருத்தி இணைப்பாளர் திருமதி பொன்மதி சிவகுமாரன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ஸ்ரீ-2)

## உடைந்து விழும் அபாயத்தை எதிர்நோக்கியுள்ள மருதங்கேணிப் பாலம்

(திருநெல்வேலி)

வடமராட்சி கிழக்கு மருதங்கேணி பாலம் கடும் ஆபத்தான நிலையில் உடையும் நிலையில் உள்ளது.

இப்பாலத்தின் ஊடாக போக்குவரத்தில் ஈடுபடுவோர் பஸ் வண்டிகளில் இருந்து இறங்கியே தொடர்ச்சியாக போக்குவரத்தில் ஈடுபடவேண்டியுள்ளது.

இப்பாலத்தை திருத்துவதற்குரிய பொருட்கள் இறக்கப்பட்டுள்ள போதிலும் இப்பாலத்தை திருத்துவதற்குரிய வேலைகள் இதுவரை ஆரம்பிக்கப்படவில்லை.

வடமராட்சி கிழக்குப் பகுதி மக்களின் பிரதான போக்குவரத்துப் பாதையாக இப்பாலம் அமைந்துள்ளமையால் இப்பாலத்தை திருத்துவதற்கான வேலைகளை உடன் ஆரம்பித்து மாற்றுப் பாதையாக நாகர் கோயில் பாதையை மக்கள் போக்குவரத்துக்கு திறக்கவேண்டுமென மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஸ்ரீ-43)

## மனிதவலு வேலைவாய்ப்பு திணைக்களத்தின் தொழிற்சந்தை

### நவம்பர் 13 இல் யாழ்ப்பாணத்தில்

மனிதவலு வேலைவாய்ப்புத் திணைக்களத்தினால் யாழ்.நகரில் நவம்பர்மாதம் 13ஆம் திகதி சனிக்கிழமை தொழிற்சந்தை ஒன்றை நடாத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இத்தொழிற்சந்தையில் கொழும்பில் இருந்து வருகை தரும் தனியார் தொழில் நிறுவனங்களும் உள்ளூர் தொழில் நிறுவனங்களும் கலந்துகொண்டு தமது பணியாளர் வெற்றிடங்களை நிரப்புவதற்கு அன்றைய தினமே நேர்முகத் தேர்வினை நடாத்தி இளைஞர்; யுவதிகளுக்கு வேலை வாய்ப்பினை வழங்க முன்வந்துள்ளன.

நல்லூர் பிரதேச செயலகப் பிரிவில் பணியாளர் வெற்றிடங்களை நிரப்ப விரும்பும் நிறுவனங்கள் எதிர்வரும் நவம்பர் மாதம் 4ஆம் திகதி வியாழக்கிழமைக்கு முன்னர் இப் பிரதேச செயலக மனித வள அபிவிருத்தி உதவியாளருடன் தொடர்புகொண்டு மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்ளுமாறு நல்லூர் பிரதேச செயலர் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-2)



நீர்வேலிச் சந்தியிலிருந்து 200 மீற்றர்தூரத்தில் அச்செழுவுக்கு செல்லும் வீதியின் வடக்குப் பக்கமாக அமைந்துள்ள தம்பிராசா சுப்பிரமணியம் என்பவரது வாழைத்தோட்டத்தில் ஒரு வாழை ஒரே தடவையில் இரண்டு குலைகளைப் போட்டுள்ளது. அந்த அதிசயத்தை தினமும் பல பொதுமக்கள் பார்வையிட்டுச் செல்கின்றனர்.

## மாதகல் மற்றும் அதனையண்டிய கிராமங்களில் நேற்று கடும் மழை

(மாதகல்)

மாதகல் மற்றும் அதனை அண்டிய கிராமங்களில் நேற்று வெள்ளிக்கிழமை அதிகாலை ஒரு மணியளவில் திடீர் மின்னல் காற்றுடன் கடும் மழை பெய்தது.

இதனால் வாட்டமுற்று வந்த பயிர்கள் கருகும் நிலையில் இருந்து மீண்டுள்ளன.

மாதகல் பிரதேச விவசாயிகள் கடந்த ஞாயிற்றுக்கிழமை வரட்சி நீங்கி மழை பொழிய வேண்டும் என கொடும்பாவி கட்டி ஒப்பாரிவைத்து ஊர்வலம் நடாத்தியமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை மழை பெய்ததையடுத்து நேற்று நண்பகல் அரசடி சித்தி விநாயகருக்கு குளிர்த்தி அபிஷேகமும் ஊர் விவசாயிகளால் செய்யப்பட்டது. (ஸ்ரீ-40)





ரி.ஆர்.ஆர். ராஜன் ஞாபகார்த்தமாக கண்டியில் நடைபெற்ற கிரிக்கெற் சுற்றுப்போட்டியில் 28 கழகங்கள் பங்குபற்றின. இதில் இரண்டாம் இடத்தைப் பெற்றுக் கொண்ட யாழ்.நகர் மைய றோட்டறக்ட் கழக வீரர்களையும் சிறந்த பந்துவீச்சாளராக தெரிவுசெய்யப்பட்ட ஆர்.நிருஜன் பரிசினைப் பெற்றுக்கொள்வதையும் படங்களில் காணலாம்.

# வடக்கு -கிழக்கு மக்கள் காணி உறுதியின்றி கடன் பெற்றுக்கொள்ள விசேட நடவடிக்கை

## இலங்கை மத்திய வங்கி தகவல்

(கொழும்பு)

வடக்கு -கிழக்குப் பிரதேசங்களில் உள்ள மக்கள் தமது காணி உறுதிகளை சமர்ப்பிக்காது, கடனுதவியைப் பெற்றுக்கொள்வதற்கான விசேட சட்டவிதிகளை அமுல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது..

இதனடிப்படையில் பிரதேசத்தில் உள்ள நிதி நிறுவனங்களிடம் கடனுதவியைப் பெற்றுக்கொள்ள மக்கள், கிராமசேவகரின் சான்றிதழ், சத்திய கடிதம் ஆகியவற்றை சமர்ப்பிப்பது போதுமானது என மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்துள்ளார்.

காணி உறுதிகள் இல்லாதவர்களுக்கும் கடனுதவியை வழங்குமாறு பணிக்கும் சுற்று நிருபம் வங்கிகளுக்கு அனுப்பிவைக்கப்படும் எனவும் அவர்கூறியுள்ளார்.

கடந்த காலம் முழுதும் இடம்பெற்ற யுத்தம் காரணமாக வடக்கு -கிழக்கில் உள்ள பெரும்பாலான மக்களின் காணி உறுதிகள் இல்லாமல் போயுள்ளன.

இதனால் இந்த மக்கள் வங்கிகளில் கடனுதவியைப் பெற்றுக் கொள்வது பெரும் சிரமங் களை எதிர்நோக்கி வருவதாகவும் இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் மேலும் கூறியுள்ளார். (ஸ்ரீ-2)


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
## ஊடகவளங்கள் பயிற்சி நிலையம்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் ஊடக வளங்கள் பயிற்சி நிலையத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் அலுவலக உதவியாளர் பதவிக்கான விண்ணப்பங்கள் பொருத்தமான விண்ணப்பதாரிகளிடமிருந்து 15.11.2010 திகதிவரை எம்மால் ஏற்றுக் கொள்ளப்படும்.

**கல்வி மற்றும் பிற தகைமைகள்:**

1. க.பொ.த (சாதாரணம்) பரீட்சையில் சித்தி
2. வயதெல்லை: விண்ணப்ப முடிவு திகதியில் 18 வயதிற்கு மேற்பட்டவராகவும் 35 வயதிற்கு உட்பட்டவராகவும் இருத்தல் வேண்டும்.

**கடமை விபரம்:**

1. பணிபுரியும் அலுவலர்களுக்கு எல்லா அலுவலக கடமைகளிலும் உதவிபுரிதல்.
2. ஊடகவளங்கள் பயிற்சி நிலையத்தின் அலுவலகம், வகுப்பறைகள் ஏனைய பகுதிகளை சுத்தமாகப் பேணுவதும், தகுந்த முறையில் பராமரிப்பதும்
3. ஊடகவளங்கள் பயிற்சி நிலையத்திற்கும் பிரதான பல்கலைக்கழக வளாகத்திற்கும் இடையேயான கடிதங்கள் மற்றும் ஆவணங்களை கையளித்தல்
4. ஊடகவளங்கள் பயிற்சி நிலையத்தின் பணிப்பாளரினால் பணிக்கப்படும் இதர கடமைகளை நிறைவேற்றுதல்

சம்பளம் : ரூபா 9000/- (நிலையானது) மாதமொன்றிற்கு

தெரிவு: நேர்முகத்தேர்வின் மூலம்

**பொதுவான நிபந்தனைகள்**

மேற்குறித்த நியமனம் முழுநேர ஒருவருட காலத்திற்கான ஒப்பந்தமாக இருக்கும். நியமனகாலத்தில் வழங்கப்பட்ட சேவை மற்றும் வேலைத்திறன் என்பவற்றின் திருப்திகர தன்மைகளைக் கொண்டு சேவை ஒப்பந்தம் புதுப்பித்து வழங்கப்படலாம்.

நியமனம் பெறுபவருக்கு ஊழியர் சேமலாபநிதிக்கும் ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கும் உதவு தொகை செலுத்தப்படும்.

**விண்ணப்பிக்கும் முறை:**

விண்ணப்பப்படிவங்களையும் இதர விபரங்களையும் பெறுவதற்கு மக்கள் வங்கியின் யாழ்.பல்கலைக்கழக கிளையில் அல்லது நிதியாளரிடம் ஒவ்வொரு விண்ணப்பப் படிவத்திற்கும் ரூபா 100/- செலுத்திப் பெற்றுக் கொள்ளப்பட்ட பற்றுச்சீட்டுடன் இப் பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட உதவிப்பதிவாளர், கல்விசார் தாபனக்கிளை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

தபால் மூலம் விண்ணப்பப்படிவங்களையும் இதர விபரங்களையும் பெறவிரும்புவோர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பதிவாளர் / நிதியாளர் பெயரில் பெறப்பட்ட ரூபா 100/- பெறுமதியான காசுக்கட்டளை அல்லது தபாற்கட்டளையுடன் 23 X 10 செ.மீ அளவுடைய சுயமுகவரியிட்ட முத்திரையொட்டப்பட்ட தபால் உறையை அனுப்ப வேண்டும்.

விதிக்கப்பட்ட படிவங்களில் அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டும் ஏற்றுக் கொள்ளப்படும்.விபரங்கள் தெளிவாக குறிப்பிடாத விண்ணப்பங்களும் விண்ணப்ப முடிவுத் திகதியின் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

**பதிவாளர்**
**யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம்.**
**2010.10.27**

(சி-1505)


# அமைச்சரவைத் தீர்மானங்கள்

### கூட்டுறவுச் சங்க ஊழியர்களுக்கு ஓய்வூதியம்

கூட்டுறவுச் சங்க ஊழியர்களுக்கு ஓய்வூதியம் வழங்குவதற்கான முறை ஒன்றை ஆராய்வதற்கென குழு ஒன்றை நியமிப்பது தொடர்பான பிரேரணையை அமைச்சரவை அங்கீகரித்துள்ளது.

கூட்டுறவு மற்றும் உள்ளக வர்த்தகத்துறை அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ இதற்கான அமைச்சரவைப் பத்திரத்தை சமர்ப்பித்திருந்தார்.

12ஆயிரத்து 500 கூட்டுறவு சங்கங்களைச்சேர்ந்த 40 ஆயிரம் ஊழியர்கள் இதன்மூலம் நன்மை அடைவர் என எதிர்பார்க்கப்படுகிறது.

### யாழ்.கைதடி எள் ஆய்வு நிலையம்

பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் ஆலோசனைக்கு ஏற்ப இந்திய அரசாங்கத்தின் உதவியுடன் யாழ்.கைதடி எள் ஆய்வு நிலையத்தை மீண்டும் கட்டியெழுப்ப அமைச்சரவை தீர்மானித் துள்ளது.

இதற்கு இந்திய அரசாங்கம் 70 மில்லியன் ரூபாவை நிதியுதவியாக வழங்குவதுடன் அடுத்தாண்டின் வரவு-செலவுத் திட்டத்தின் ஊடாக அரசாங்கம் 23 மில்லியன் ரூபாவை ஒதுக்கவுள்ளது.

### ஐந்து வருடத்தில் தனி நபர் வருமானத்தை இரட்டிப்பாக்கல்

எதிர்வரும் ஐந்துவருடங்களில் நாட்டின் தனிநபர் ஒருவரின் வருமானத்தை இரட்டிப்பாக்குவதற்கான பொருளாதார வழிமுறைகளைக் கண்டறிவதற்கான குழு ஒன்றை நியமிக்க அமைச்சரவை முடிவு செய்துள்ளது.

ஜனாதிபதி செயலாளர் பிரதமரின் செயலாளர், அமைச்சரவை செயலாளர் மற்றும் நிதித் திட்டமிடல் அமைச்சின் செயலாளர் ஆகியோர் இக்குழுவில் இடம்பெறுகின்றனர். விஞ்ஞான ஆராய்ச்சி அமைச்சின் செயலாளர் இத்திட்டத்தின் ஒருங்கிணைப்பாளராகக் கடமையாற்றுவார்.

### தேசிய பாதுகாப்புதினம்

இடர்முகாமைத்துவ அமைச்சர் ஏ.எச்.எம். பௌசியின் ஆலோசனைக்கு ஏற்ப பிரதி வருடமும் டிசம்பர் 26ஆம்திகதியை தேசிய பாதுகாப்புத் தினமாக அனுஷ்டிப்பதற்கு அமைச்சரவை இணக்கம் கண்டுள்ளது.

சுனாமி அனர்த்தம் இடம்பெற்றதை நினைவுகூறும் முகமாக இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதோடு அனர்த்தங்கள் குறித்த விழிப்புணர்வை மக்கள் மத்தியில் ஏற்படுத்துவதே இதன் நோக்கமாகும்.

### கராப்பிட்டிய வைத்தியசாலை

கராப்பிட்டிய வைத்தியசாலைக்கு 500 மில்லியன் ரூபா செலவில் அவசர சிகிச்சை மத்திய நிலையம் ஒன்றை அமைக்கும் திட்டத்தை அமைச் சரவை அங்கீகரித்துள்ளது.

சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேனவின் இந்தத் திட்டத்துக்கு அவுஸ்திரேலியா நிதி உதவிகளை வழங்குகின்றது.

### இயற்கை உரம் தயாரிப்பு

விவாசய அமைச்சர் மஹிந்த யாப்பா அபேவர்த்தனாவின் ஆலோசனைக்கு ஏற்ப மாக்கதுரை பகுதியில் 60 மில்லியன் ரூபா செலவில் இயற்கை உரம் தயாரித்தல் மற்றும் பாவனை தொடர்பாக பயிற்றுவிக்கும் மத்திய நிலையம் ஒன்றை அமைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

### கொழும்பில் சுற்றாடல் கூட்டம்

சுற்றாடல்துறை அமைச்சர் அனுர பிரியதர்ஷன யாப்பாவின் அமைச்சரவை பத்திரத்துக்கு ஏற்ப தெற்காசிய சுற்றாடல் ஒத்துழைப்புத் திட்டத்தின் 12ஆவது நிர்வாக சபைக் கூட்டத்தை எதிர்வரும் 3 ஆம் திகதி கொழும்பில் நடத்த அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

# சிங்கப்பூர் கடலில் காணாமல்போன கப்பல் பணியாளரின் தந்தைக்கு நட்டஈடு


(கொழும்பு)

சிங்கப்பூரை அண்டிய கடற்பரப்பில் பயணித்துக் கொண்டிருந்த சிமனேறு என்ற கப்பலில் கடமையாற்றிய போது காணாமற்போன கப்பல் பணியாளர் எஸ்.ஏ. பெரேரா என்பவரின் தந்தைக்கு 90 இலட்ச ரூபா நட்ட ஈடு வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த கப்பல் பணியாளர் தற்கொலை செய்து கொண்டதாக கப்பல் நிறுவனம் முன்னர் அறிவித்திருந்ததுடன் கப்பலில் பணியாற்றிய ஏனையவர்களிடம் நடத்திய விசாரணைகளின் போது இது தற்கொலைச் சம்பவமல்ல என்பது புலனாகியதாக இலங்கை வர்த்தகக் கப்பல் பணியாளர் சங்கம் சுட்டிக் காட்டியுள்ளது.

நட்ட ஈட்டுத் தொகை வழங்கும் நிகழ்வு தொழில் அமைச்சர் காமினி லொக்குகே தலைமையில் இடம் பெற்றது. (ஸ்ரீ-2)

# மிளகாயில் பீடைகளும் முகாமைத்துவமும்



கலாநிதி கு.மிகுந்தன்
தலைவர்
உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்


12-X

## இனியொரு பசுமைப் புரட்சிக்கு...

இரண்டாவது காரணியான சிற்றுண்ணி மிளகாய் இலையின் கீழ்ப்புறத்திலிருந்து கீழ்ப்பக்கத்திலுள்ள கலங்களை சுரண்டி உண்பதால் இலையின் கீழ்ப்புறத்திலுள்ள கலங்கள் இறந்து விருத்தி தடைப்பட அவ்விடத்திலுள்ள மேற்புற கலங்கள் விருத்தியடைய இலை கீழ் நோக்கி சுருங்கும். இதனை downward Leaf Curling என அழைப்பர். இது இன்னொரு வகை இலைச் சுருள்.

மூன்றாவது காரணியாக வைரசைக் குறிப்பிடலாம்.குறிப்பாக வைரசினது தாக்கம் நாற்றுமேடையில் அரிது. கிளை பரப்பி பூக்கும் காலத்திலேற்படும் வைரசு தொற்றின் மூலமாக இலைகள் மிகவும் சிறிதாகி கணுவிடைகள் குறைந்து நெருக்கமாகி அடர்த்தியானதாக காணப்படும். இந்தளவிற்கு நோய்த்தொற்று வீரியமான பின்பு இக்கிளைகளிலிருந்து பூக்களோ, காய்களோ எதுவும் இருக்காது, பொதுவாகவே குருமன் என்னும் அறிகுறி இவ் வைரஸ் தொற்றினால் அதன் வீரிய தன்மையினால் பயிரில் ஏற்படும் மாற்றமாகும். அதுவும் மிகவும் தீவிரமான நோய்க் காரணியாக இவ்இலைச்சுருளல் வைரசான ஜெமினி வைரஸ் இருந்தால் அதன் சேதத்தை "எரிகுருமன்" என அழைக்கின்றோம். எரிகுருமன் வைரசை காவி தொற்று ஏற்பட சாறு உறிஞ்சும் இரு பூச்சி பீடைகள் உதவுகின்றன. ஒன்று வெண்ஈ (Whitefly) மற்றையது அழுக்கணவன்(Aphid) ஆகும். இதில் வெண்ஈயினது பங்களிப்பு மிக மிக அதிகம்.

***எனவே, மிளகாயில் இலைச்சுருளல் என்பது பல்வேறு காரணிகளால் தோற்றுவிக்கப்படுவதனால் அதனை ஆங்கிலத்தில் Leaf Curl Complex என அழைப்பர்.*** மூன்று காரணிகளும் தனித்தோ அல்லது கூட்டாகவோ இலைச்சுருளலுக்கு காரணமாயிருக்கலாம். எந்த வகையான இலைச்சுருளல் என்பதனை நிர்ணயஞ் செய்த பின் இதற்கான கட்டுப்பாட்டு முறைகளில் கவனஞ் செலுத்தலாம்.




**பனிப்பூச்சி (Thrips)**

மிளகாயில் மேல் நோக்கிய இலைச் சுருளலை ஏற்படுத்தும் காரணியாக பனிப்பூச்சி அறியப்பட்டுள்ளது. இது ஒரு பூச்சிப் பீடை ஆகும்.இதற்கு சிர்டோ திரிப்ஸ் டோசாலிசு (Scirtothrips dorsallis) எனப் பெயரிட்டுள்ளனர்.

பெண் பனிப்பூச்சியானது தனது சூலிடப்படுத்தியைப் பயன்படுத்தி முட்டைகளை இலைமேற்பரப்பின் வெளித்தோலினுள் இடும்.முட்டை பொரித்து வெளிவரும் 1ஆம் புழுப்பருவம் மற்றும் அதிலிருந்து உருமாறும் 2ம் புழுப்பருவங்களும் உணவுண்ணும் பருவங்களாதலினால் இலைப்பரப்பில் விரைந்து சேதத்தை ஏற்படுத்தி விடும். இதற்குப் பிறகு வரும் கூட்டுப்புழுவுக்கு முன்னான (Pre pupa) பருவமும் கூட்டுப்புழு பருவமும் உணவுண்ணாது தரைக்கீழே உயிர் வாழும் இயல்புடையது. அதாவது வழமையாக நிலக் கீழே கூட்டுப்புழுவாகும். இந்த இயல்பினால் பனிப்பூச்சியினுடைய கூட்டுப் புழுவை கட்டுப்படுத்துவது கடினமாகும். கூட்டுப்புழு பருவத்தில் இரு நிலைகளையும் மண்ணினுள்ளே கொண்டிருக்கும் பனிப்பூச்சியின் நிறைவுடலி வெளி வந்தவுடன் தனது இறக்கைகளை விரித்துப் பறக்கும். நிறைவுடலி பருவமும் அராத்தி உறிஞ்சும் வாயுறுப்பைக் கொண்டிருப்பதனால் நிறைவுடலியாலும் சேதம் அதிகமாகும். பனிப்பூச்சியின் வாழ்க்கை வட்டத்தை உற்று நோக்கினால் பீடை மற்றும் இரு கூட்டுப்புழு நிலைகள் தவிர்ந்த இரு புழு பருவங்களும் நிறைவுடலியும் மிளகாய் இலையில் சேதத்தை ஏற்படுத்தும் பருவங்களாகும்.




**பனிப்பூச்சியின் சிறப்பியல்பு**

பனிப்பூச்சியின் எண்ணிக்கை அதிகரிப்பதற்கும் வளிமண்டல வெப்பநிலை அதிகரிப்பதற்கும் தொடர்பு உண்டு. வளிமண்டல வெப்பநிலை அதிகரிக்கும் போது பனிப்பூச்சியானது தனது வழமையான வாழ்க்கை வட்டத்தினை சுருக்கி விரைந்து நிறைவுடலியாகும் தன்மையைக் கொண்டிருக்கும். இதனால் காலநிலை மாற்றத்தினா0ல் வளிமண்டல வெப்பநிலை அதிகரித்துச் செல்லும் இக்காலத்தில் பனிப்பூச்சியின் பெருக்கமும் வழமைக்கு மாறாக அதிகரித்துச் செல்லும்.

இதன் காரணமாக இப்பூச்சி பீடையிலான சேதம் மிளகாயில் மட்டுமல்ல ஏனைய பயிர்கள்/ தாவரங்களி லும் அதிகரித்துக் காணப்படுகின்றது.

அதிகமான விருந்து வழங்கிகளைத் தன தாக்கிக்கொண்ட பனிப்பூச்சியை கட்டுப்படுத்துவது சுலபமான காரியமல்ல.

பல்வேறு வகைகளாலும் இப்பனிப்பூச்சி விரைந்து பெருகுவதற்கான வழிகளைக் கொண்டிருப் பதுவும் இப் பனிப்பூச்சி பீடையைக் கட்டுப்படுத்தலில் சிக்கலைத் தரக் கூடும்.

மண்ணினுள் கூட்டுப்புழுவைக் கொண்டிருப்பதும் இன்னொரு பிரச்சினையாகும். மேலும் இலைப்பரப்பில் மேல் தோலுக்குள்ளாக முட்டையிடுவதனால் முட்டையையும் ஒட்டுண்ணிகளோ, இரை கௌவிகளோ அன்றி நோயை உருவாக்கும் நுண்ணங்கிகளோ பாதிக்கமுடியாதல்வா?

(தொடரும்)

# மாணவர்களுக்கிடையிலான போட்டிப் பரீட்சை முடிவுகள்

கொக்குவில் மேற்கு ஸ்ரீவராகி சனசமூக நிலையத்தின் 25 ஆவது ஆண்டு விழாவை முன்னிட்டு மாணவர்களுக்கான போட்டிப் பரீட் சைகள் நடத்தப்பட்டன.

இப்போட்டிப் பரீட்சைகளில் முதல் 3 இடங்களைப் பெற்ற மாணவர்களின் விபரம் வருமாறு,

**பிரிவு-I (தரம் 3-5)**

**சைவசமய அறிவு**

கு.சானுஜன், சா.சானுஜா (யா/வண்ணை வைத்திலிங்கம் வித்தியாலயம்), மு.டன்சியா (யா/ஆனைக்கோட்டை றோ.க.த.க.பாடசாலை)

**பிரிவு-II(தரம்6-9)**

**பொது அறிவு**

ஏ.டமறி ஷிரோஜினி, கோ.நிறோகிலன் (யாழ்.கல்லூரி,ஆனைக்கோட்டை), இ.தனுவர்ணன் (யா/கொக்குவில் இந்துக் கல்லூரி)

**பிரிவு-III (தரம்10-13)**

**பொதுஅறிவும் உளச்சார்பும்**

வி.செந்தூரன், ம.நியோகிதன் (யா/யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி), இ.விதுஷன் (யாழ்.கல்லூரி, ஆனைக்கோட்டை)

இவர்களுக்குரிய பரிசில்களும் சான்றிதழ்களும் எதிர்வரும் 3ஆம் திகதி கொண்டாடப்படவுள்ள சனசமூக நிலையத்தின் வெள்ளி விழாவில் வைத்து வழங்கப்படும் எனவும் மேலும் ஆறுதல் பரிசில்களும் வழங்கப்படவுள்ளதாகவும் மேற்படி சனசமூக நிலையத்தினர் அறிவித்துள்ளனர்.

(ஸ்ரீ)

# குடும்பத்தை பராமரிக்க சூதாட்டத்தில் ஈடுபட்ட 7 பெண்கள் பொலிஸாரால் கைது

(கொழும்பு)

கொழும்பின் புறநகர்ப் பகுதியில் ஒன்றான கல்கிசை பிரதேசத்தில் உள்ள வீடு ஒன்றில் நீண்டகாலமாக சூதாட்டத்தில் ஈடுபட்ட வந்த பெண்கள் ஏழு பேர் நேற்றுமுன்தினம் கல்கிசை பொலிஸ் நிலைய பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்கள்.

கைது செய்யப்பட்ட பெண்களில் சிலருடைய கணவன்மார் சிறையில் தண்டனை அனுபவித்துக் கொண்டிருக்கின்றார்கள். ஏனையோரின் கணவன்மார் எடுபிடி வேலைகள் செய்பவர்களாக இருக்கின்றனர்.

குடும்பத்தை பராமரிக்க வேறு வருமானம் இல்லாமையால் அல்லது கணவன்மாரின் வருமானம் போதாமையால் பணம் சம்பாதிக்கின்றமைக்கு சூதாட்டத்தையே ஒரே ஒரு மார்க்கமாக கண்டிருந்தனர் என்று இப் பெண்கள் பொலிஸாருக்கு தெரிவித்துள்ளார்கள்.(ஸ்ரீ-2)

# கல்விப் புலமை மிகுந்த சமுதாயத்தை கட்டியெழுப்ப அனைவரும் பாடுபடுவோம்

## சிறிதரன் எம்.பி தெரிவிப்பு



(கிளிநொச்சி)

யாவற்றையும் இழந்த நிலையில் இப்பொழுது எங்களுடன் கூட இருப்பது கல்வி ஒன்றுதான். யுத்த சூழ்நிலையில் ஏராளமான உயிர்கள் பறிக்கப்பட்டு, வாழ்வாதாரங்கள் சிதைக்கப்பட்டு, கூடாரங்கள் வாழ்விடங்களாக மாறி சொல்லொணாத் துன்பங்கள் மத்தியில் வாழ்ந்து வரும்நிலையல் எம்மைத் தலைநிமிரவைப்பது கல்வி ஒன்றுதான்.

இவ்வாறு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தெரிவித்துள்ளார்.

அண்மையில் கிளிநொச்சி செல்வாநகர்ப் பிரதேசத்தில் யூதா முன்பள்ளி திறப்பு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

யுத்தம் காரணமாக சொல்லொணாத் துயரங்களை அனுபவித்தோம். ஏராளமான மாணவச் செல்வங்களைப் பறிகொடுத்தோம். அறிவுப் பொக்கிசங்களை இழந்தோம்.

இனி இழக்க ஒன்றும் இல்லை என்ற நிலையில் இன்று கல்வியைப் பற்றியவர்களாகவே வாழ்ந்து வருகின்றோம்.

எனவே கல்விக்கு அத்திவாரமாக விளங்குகின்ற முன்பள்ளிகளைப் புனரமைப்பதற்கு நாம் எல்லோரும் கைகொடுக்க வேண்டும்.இவற்றையெல்லாம் ஒழுங்குமுறையில் செய்யுமிடத்து எமது தமிழ்ச் சமுதாயத்தை கல்விப் புலமை மிகுந்த சமுதாயமாக மாற்றியமைக்கலாம். இதற்கு எல்லோரும் தோள்கொடுத்து தீவிரமுனைப்புக் காட்டவேண்டும் என்று தெரிவித்தார்.

(ஸ்ரீ)

# வெளிநாடுகளுக்கு அனுப்புவதாக கூறி பணத்தைச் சுருட்டிய கும்பல்

மன்னாரில் இருந்து வெளிநாடுகளுக்கு ஆட்களை அனுப்புவதாக கூறி பல இலட்சம் ரூபா பணம் பெற்று வரும் கும்பலொன்றிடம் அம்மாவட்டத்தைச் சேர்ந்த பலர் ஏமாந்துள்ளதாக பாதிக்கப்பட்டவர்கள் தெரிவித்துள்ளானர்.

கனடா, இத்தாலி, ஜேர்மன், பிரான்ஸ் போன்ற நாடுகளுக்கு வெளிநாட்டு விசாக்களை பெற்றுத் தருவதாகவும் இதற்கு ஆதாரமாக ஓர் இரு போலி ஆவணங்களை காட்டியும் இரண்டு மாதங்களுக்குள் அனுப்பி வைப்பதாகவும் கூறி ஒரு இலட்சம் முதல் 5 இலட்சம் ரூபா வரை பணம் பெற்றுள்ளதாகவும் தெரிய வருகின்றது.

இந்தக் கொள்ளைக் கும்பலிடம் பலர் தொடர்ந்தும் ஏமாற்றப்பட்டு வருவதாகவும் தெரியவருகின்றது. (ஸ்ரீ-2)

# காலாவதியான பொருட்கள் கைப்பற்றி அழிக்கப்பட்டது

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி சந்தைப் பகுதியில் நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கையின் போது காலாவதியான பொருட்கள் கைப்பற்றி அழிக்கப்பட்டன.

திருநெல்வேலி சந்தைப் பகுதியில் உள்ள கடைகள் நேற்று முன்தினம் திடிரென சோதனைக்குட்படுத்தப்பட்டது. இதன் போது பல கடைகளில் இருந்து காலாவதியான பொருட்கள் கைப்பற்றி அழிக்கப்பட்டுள்ளன.

நல்லூர் பிரதேச சபை மற்றும் பொதுச் சுகாதாரப் பிரிவு என்பன இணைந்து இந்த சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டதாகவும் இதன் போது பல ஆயிரக்கணக்கான பொருட் கள் கைப்பற்றி உடன் அழிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(ச-6)

# யுத்தத்தால் விதவையானோருக்கு சுயதொழில் வாய்ப்புத் திட்டங்கள்

யுத்தம் காரணமாக கணவனை இழந்த பெண்களுக்கு சுயதொழில் வாய்ப்புத் திட்டங்கள் அறிமுகப்படுத்தப்படவுள்ளதாக சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் விவகார அமைச்சர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் தெரிவித்துள்ளார்.

யுத்தம் காரணமாக கணவனை இழந்த வடக்கு, கிழக்கு பெண்களுக்கு இந்த சுய தொழில் வாய்ப்புத் திட்டம் அறிமுகப்படுத்தப்படவுள்ளதாகவும் ஐக்கிய நாடுகளின் பெண்களுக்கான அபிவிருத்தி நிதியத்துடன் இணைந்து இந்தத் திட்டங்கள் முன்னெடுக் கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் யுத்தம் காரணமாக விதவைகளாக்கப்பட்டவர்களுக்கு இந்திய அரசாங்கத்துடன் இணைந்து சுயதொழில் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை மூன்று தசாப்த யுத்தம் காரணமாக 89 ஆயிரம் பெண்கள் கணவரை இழந்துள்ளதாகத் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# இந்து பக்தர்களுக்காக ரஷ்யாவில் விஷ்ணு ஆலயம்

ரஷ்யாவில் வாழும் இலங்கை, இந்தியா போன்ற நாடுகளைச் சேர்ந்த இந்துக்களின் வழிபாட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்கின்றமைக்காக அந்நாட்டு அரசின் ஆதரவுடன் விஷ்ணு ஆலயம் தலைநகர் மொஸ்கோவில் நிர்மாணிக்கப்பட உள்ளது.

அரசின் சார்பில் மொஸ்கோ சொசைட்டி ஒவ் கிருஷ்ணா என்கிற விஷ்ணு பக்தர்கள் சமூகத்துக்கு சம்பிரதாய முறைப்படி வெரெஸ்கினோ கிராமத்தில் இரண்டு ஹெக்ரெயர் காணியை மொஸ்கோ பதில் முதல்வர் விளாடிமிர் ரெசின் கையளித்துள்ளார்.

சட்ட ரீதியான தேவைகள் பூர்த்தியாக்கப்பட்ட பின்னர் அடுத்த வருடம் நிர்மாண வேலைகள் ஆரம்பிக்கப்படும். (ஸ்ரீ-2)

# கோப்பாய்க் கோட்ட பாடசாலைகளின் உதைப்பந்தாட்ட போட்டி முடிவுகள்

(கோப்பாய்)

கோப்பாய் கல்விக் கோட்டத்தினால் பாடசாலைகளுக்கிடையில் நடாத்தப்பட்ட உதைப்பந்தாட்ட போட்டிகளில் வெற்றியீட்டிய பாடசாலை அணிகளின் விபரம் அறிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி போட்டியில் பங்குபற்றி முதன் மூன்று இடங்களைப் பெற்ற பாடசாலை அணிகளின் விபரங்கள் வருமாறு;

**14 வயது பிரிவு**

உரும்பிராய் இந்துக்கல்லூரி, ஊரெழு கணேசா வித்தியாசாலை, அச்செழு சைவப் பிரகாச வித்தியாசாலை

**16 வயது பிரிவு**

அத்தியார் இந்துக்கல்லூரி, உரும்பிராய் இந்துக்கல்லூரி, ஊரெழு கணேசா வித்தியாசாலை

**18 வயது பிரிவு**

ஊரெழு கணேசா வித்தியாசாலை, உரும்பிராய் இந்துக் கல்லூரி, அத்தியார் இந்துக்கல்லூரி.

(ஸ்ரீ)

# 2010.10 30 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1485 - ஏழாம் ஹென்றி இங்கிலாந்தின் மன்னனாக முடிசூடினான்.
- 1831 - ஐக்கிய அமெரிக்காவில் அடிமை கிளர்ச்சி செய்த நாட்டர்னர் வேர்ஜீனியாவில் கைது செய்யப்பட்டான்.
- 1905- ரஷ்ய மன்னன் இரண்டாம் நிக்கலஸ் ரஷ்யாவின் முதலாவது அரசியலமைப்பை அறிவித்து பிரதிநிதிகள் அவையை நிறுவினான்.
- 1918 - ஒட்டோமான்பேரரசு கூட்டுப் படைகளுடன் உடன்பாட்டுக்கு வந்ததில் மத்திய கிழக்கில் முதலாம் உலகப் போர் முடிவுக்கு வந்தது.
- 1920 - அவுஸ்திரேலியக் கம்யூனிஸ்ட் கட்சி சிட்னியில் அமைக்கப்பட்டது.
- 1922 - முசோலினி இத்தாலியின் பிரதமர் ஆனார்.
- 1925 - ஜோன் லோகி பயர்ட் பிரித்தானியாவின் முதலாவது தொலைக்காட்சி ஒளிபரப்பியை அமைத்தார்.
- 1941 - மேற்கு உக்ரைனில் ஆயிரத்து 500 யூதர்கள் நாசிகளினால் பெல்செக் வதை முகாமிற்கு அனுப்பப்பட்டனர்.
- 1945 - இந்தியா ஐ.நாவில் இணைந்தது.
- 1961-சோவியத் ஒன்றியம் 50 மெகாதொன் அளவுள்ள "சார் பொம்பா" என்ற அணுகுண்டை வெடிக்க வைத்தது இதுவே இந்நாள் வரை வெடிக்கப்பட்ட மிகப் பெரிய அணுகுண்டாகும்.
- 1961 - ஜோசப் ஸ்டாலினின் உடல் மொஸ்கோவின் கிரெம்லினில் லெனின் நினைவகத்தில் இருந்து அகற்றுவதற்கு முடிவெடுக்கப்பட்டது.
- 1970 - வியட்நாமில் இடம்பெற்ற பெரும் வெள்ளம் காரணமாக 293 பேர் கொல்லப்பட்டு 2இலட்சம் பேர் வீடுகளை இழந்தனர்.
- 1972 - சிக்காகோவில் இரண்டு பயணிகள் தொடருந்துகள் மோதியதில் 45 பேர் கொல்லப்பட்டனர்.
- 1973 - ஐரோப்பாவையும் ஆசியாவையும் இணைக்கும் பொஸ்பரஸ் பாலம் துருக்கியின் இஸ்தான்புல் நகரில் அமைக்கப்பட்டது.
- 1985 - சலேஞ்சர் விண்ணோடம் தனது கடைசி வெற்றிகரமான பயணத்தை ஆரம்பித்தது.
- 1991 - மத்திய கிழக்கு அமைதி மாநாடு மாட்ரிட் நகரில் ஆரம்பமானது.
- 1995 - யாழ். குடாநாட்டு மக்கள் இடம் பெயர்ந்து குடாநாட்டைவிட்டு வெளியேறினர்.
- 1995 - கனடாவில் இருந்து பிரிந்து செல்ல கியூபெக் மாநிலத்தில் எடுக்கப்பட்ட மக்கள் வாக்கெடுப்பு 50.6%- 49.4% என்ற கணக்கில் தோற்கடிக்கப்பட்டது.
- 2006 - ஜெனீவாவில் விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசுக்கும் இடையில் இடம்பெற்ற பேச்சு வார்த்தைகள் முறிவடைந்தன.
- 2006 - பாகிஸ்தானின் எல்லையோரத்தில் கார் பகுதியில் உள்ள மதராசா மீது இராணுவம் நடத்திய தாக்குதலில் 80 தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர்.

## பிறப்புகள்

- 1735 - ஜோன் ஆடம்ஸ், ஐக்கிய அமெரிக்காவின் இரண்டாவது ஜனாதிபதி (இ. 1826)
- 1821 - ஃபியோடார் டாஸ்டோவ்ஸ்கி, ரஷ்ய எழுத்தாளர் (இ. 1881)
- 1908 - முத்துராமலிங்கத் தேவர், இந்திய விடுதலைப் போராட்ட வீரர் (இ. 1963)
- 1909 - ஹோமி பாபா, இந்திய அணுவியல், இயற்பியல் ஆராய்ச்சியாளர் (இ. 1966)
- 1962 - கொட்னி வோல்ஷ், மேற்கிந்தியத் தீவுகள் துடுப்பாட்ட, பந்து வீச்சாளர்.
- 1977 - டிமிட்ரி மாஸ்கரேஞாஸ், இங்கிலாந்து துடுப்பாட்டக்காரர்


## இறப்புகள்

- 1910-ஹென்றி டியூனாண்ட், செஞ்சிலுவைச் சங்கத்தை ஆரம்பித்தவர், நோபல் பரிசு பெற்றவர் (பி. 1828)
- 1963 - முத்துராமலிங்கத் தேவர், இந்திய விடுதலைப் போராட்ட வீரர் (பி. 1908)
- 1973 - ரா.கிருஷ்ணசாமி நாயுடு, தமிழக அரசியல்வாதி (பி. 1902)
- 1975 - குஸ்டாவ் லுட்வீக் ஹேர்ட்ஸ், ஜெர்மனிய இயற்பியலாளர், நோபல் பரிசு பெற்றவர் (பி. 1887)
- 1979 - சுபத்திரன், இலங்கையின் முற்போக்கு இலக்கிய கவிஞர் (பி. 1935)
- 1999 - சௌமியமூர்த்தி தொண்டமான், இலங்கையின் மலையகத் தமிழர்களின் அரசியல் தலைவர் (பி. 1913)

**1964 - இலங்கையின் மலையகத்தமிழர்களை நாடு கடத்த உதவிய சிறிமா - சாஸ்திரி உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது.**







யா/ புனித றோக்ஸ் றோ.க.வித்தியாலய மாணவர்களுக்கு யாழ்.எயிட் நிறுவனத்தால் பாதணிகளும் அப்பியாசக் கொப்பிகளும் நேற்று முன்தினம் வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்.பல்கலைக்கழக இந்துநாகரிகத் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி நாச்சியார் செல்வநாயகம் மாணவி ஒருவருக்கு அப்பியாசக்கொப்பிகள் வழங்குவதையும் பாடசாலை அதிபர் அ.மரியதாஸ் மாணவிக்கு பாதணி வழங்குவதையும் பாடசாலை மாணவர்கள் அமர்ந்திருப்பதையும் படங்களில் காணலாம். (படங்கள்:-எஸ்.கரன்)

# கிராமமட்ட மக்களின் ஆதரவினை திரட்டுவதற்கு ஐ.தே.க.முனைப்பு

(கொழும்பு)

கிராம மட்ட மக்களின் ஆதரவினைத் திரட்டுவது குறித்துக் கூடுதல் கவனம் செலுத்தப்படும் என ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் கரு ஜயசூரிய • தெரிவித்துள்ளார்.

கடந்த காலங்களில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு காணப்பட்ட கிராம மட்ட ஆதர வினை மீளவும் பெற்றுக்கொள்ளும் நோக்கி லேயே கிராம சாரிக்க திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதென அவர் குறிப்பிட்டுள்ளார்.

கிராம மக்களின் வாக்குகளைக் கொண்டே எதிர்வரும் தேர்தலில் கட்சியின் வெற்றி நிர்ணயிக்கப்படும் எனவும் சகல தேர்தல் தொகுதிகளுக்கும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர்கள் விஜயம் செய்ய உள்ளதாகவும், கிராமப்புற மக்களின் வீடுகளுக்கு நேரடியாக தலைவர்கள் விஜயம் செய்து கட்சியின் திட்டங்களை விளக்க உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

குறிப்பாக, எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களை இலக்குவைத்து பிரசார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

கிராம மட்டத்திலான ஆதரவினை வலுப்படுத்திக் கொள்வதன் மூலம் எதிர்கால தேர்தல்களில் வெற்றியீட்ட முடியும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த 2004ஆம் ஆண்டு தேர்தல் தோல்வியின் பின்னர் பண்டித்தரட்னவினால் பரிந்துரை செய்யப்பட்ட யோசனைத் திட்டங்களே தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதாக அவர் தெரிவித்துள்ளார். ஐக்கிய தேசியக்கட்சிக்குள் எவ்விதமான பிளவுகளும் கிடையாதென அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கட்சியின் நன்மதிப்பை மேம்படுத்தும் நோக்கில் மேற்கொள்ளப்படும் பிரசாரங்களில் தவறில்லை என்றும் தனிப்பட்ட நபர்களின் நன்மதிப்பை மேம்படுத்திக் கொள்வதற்காக மேற்கொள்ளப்படும் பிரசாரங்களில் உடன்பாடில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, ஐக்கிய தேசியக் கட்சியின் அம்பாந்தோட்டை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் சஜித் பிரேமதாச கட்சித் தலைமையுடன் இணையாது தனியான முறையில் கிராம ரீதியான பிரசாரங்களை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

# தாய்லாந்தில் நூற்றுக்கும் மேற்பட்ட இலங்கைத் தமிழர்கள் கைதாகினர்

தாய்லாந்து பொலிஸார் நேற்று முன்தினம் மாலை மேற்கொண்ட திடீர் சுற்றிவளைப்பு தேடுதல் நடவடிக்கைகளின் போது நூற்றுக்கும் அதிகமான இலங்கைத் தமிழர்கள் அங்கு கைதுசெய்யப்பட்டனர்.

மலேசிய-தாய்லாந்து எல்லைப் பகுதியில் அமைந்துள்ள சோங்க்லா, ஹற்பை ஆகிய கிராமங்களில் வீடுகளை வாடகைக்கு எடுத்து தங்கி இருந்தவர்களிடம் உரிய ஆவணங்கள் இருக்கவில்லை என்று பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்படுகின்றது.

இவர்கள் கப்பலொன்றின் மூலம் கனடா செல்லத் தயார் நிலையில் இருந்தார்கள் என்று பொலிஸ் சந்தேகிக்கின்றது. இவர்களில் பெண்கள், சிறுவர்களும் அடங்குகின்றார்கள். (ஸ்ரீ-2)

# போலி விசாக்களுடன் நாட்டில் தங்கியிருந்த இந்தியர்கள் கைதாகி விளக்கமறியலில்


(கொழும்பு)

நாட்டில் போலி விசாக்களில் தங்கியிருந்தனர் என்கிற குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்ட இந்தியர்கள் ஆறுபேரை எதிர்வரும் நவம்பர் 11ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்க வேண்டும் என்று கல்கிசை நீதவான் நீதிமன்றம் நேற்று முன்தினம் உத்தரவிட்டது.

இவர்கள் சுற்றுலாப் பயணிகளுக்கான விசாக்களில் நாட்டுக்குள் பிரவேசித்து வெள்ளவத்தையில் உள்ள தொடர்மாடி ஒன்றில் தங்கியிருந்ததாகவும், வெள்ளவத்தைப் பொலிஸ் நிலையப் பொலிஸார் இரகசியத் தகவல் ஒன்றின் அடிப்படையில் தொடர்மாடியை சுற்றிவளைத்து இவர்களைக் கைதுசெய்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இவர்களின் கடவுச் சீட்டுக்களைப் பெற்றுக் கொண்ட பொலிஸார் குடிவரவு - குடியகல்வு திணைக்கள அதிகாரிகளிடம் பரிசோதித்தபோது போலியான விசாக்களில் இவர்கள் நாட்டில் தங்கியிருக்கின்றனர் என்று கண்டுபிடிக்கப்பட்டது.

ஆறுபேரையும் நீதிமன்றில் ஆஜராக்கிய பொலிஸார் இது தொடர்பாக மேலதிக புலனாய்வு விசாரணைகளை முடுக்கிவிட்டுள்ளனர் என்று மன்றுக்கு தெரிவித்தனர். கல்கிசை நீதிவான் ருச்சிர வெலிவத்தை ஆறுபேரையும் விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார். (ஸ்ரீ-2)




# வீதியைப் புனரமைத்து சீரான போக்குவரத்துக்கு உதவுங்கள்!

பெரும்பாலான மக்கள் போக்குவரத்துக்குப் பயன்படுத்தி வரும் சண்டிலிப்பாய் வடக்கு ஆவளை வீதி நீண்டகாலமாக புனரமைக்கப்படாதுள்ளது.

இதுகுறித்து பல்வேறு அதிகாரிகளிடமும் முறைப்பாடு செய்யப்பட்டும் பலரும் பாராமுகமாகவேயுள்ளனர்.சிலர் இதனை வந்து பார்த்துவிட்டு வெள்ள வாய்க்கால் எனத் தெரிவித்து செல்கிறார்கள்.

இவ்வீதி அமைந்துள்ள இடமானது மக்கள் செறிந்து வாழும் பிரதேசமாகும்.

மழைக்காலங்களில் இவ்வீதியின் நிலைமையோ மிகவும் மோசம்! மழைக்காலங்களில் இவ்வீதியால் பயணிக்கும் மாணவர்கள் வழுக்கிவிடும் நிலையை எதிர்நோக்குகின்றனர். இப்படியான சம்பவங்களால் அவர்கள் பாடசாலைக்குச் செல்லாமல் வீடு திரும்புவர் நிலையையும் அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.எனவே இவ் வீதியைப் பயன்படுத்தும் அனைவரும் பெரும் பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றனர். இவ்வீதியை மட்டும் பயன்படுத்தும் துர்ப்பாக்கிய நிலையும் காணப்படுகிறது.

இவ்வீதி திருத்தியமைக்கப்படும் பட்சத்தில் பாடசாலை மாணவர்கள், வயோதிபர்கள் முதல் பலரும் எதிர்கொள்ளும் சவால்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்படும்.எனவே இவ் வீதியைத் திருத்தி சீரானபோக்குவரத்துக்கு உதவுமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளை தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

எஸ்.தவராஜா, சண்டிலிப்பாய்

# இவ்வீதியின் நிலைமையையும் சற்று கவனிப்பீர்களா ?

பிரான்பற்று வீதியிலிருந்து பிரிந்து செல்லும் மாளியவத்தை வீதியானது (செல்லையார் வாத்தியார் வீதி) பல வருடங்களாக திருத்தப்படாமலுள்ளது. இதுதொடர்பாக வலி.மேற்கு பிரதேசசபைக்கு பலமுறை அறிவித்தும் இதுவரை வீதி திருத்துவதற்குரிய நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை. ஏறத்தாழ 20-25 வருடங்களுக்கு முன் இவ் வீதியானது தார் ஊற்றி செப்பனிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இது இவ்வாறிருக்க, இவ்வீதியிலிருந்து பிரிந்து செல்லும் விளிசுட்டி கிராம சிறுவீதி சில மாதங்களுக்கு முன் உலக உணவுத் திட்டத்தின் கீழ் புனரமைப்பு என்ற பெயரில் மக்கி மண் மூலம் செப்பனிடப்பட்டுள்ளது.

மழை காலங்களில் வேறு பகுதிகளிலிருந்து வழிந்தோடிவரும் மழை வெள்ளம் இவ்வீதியால் தான் பயணம் செய்கிறது. இவ்விடயம் தெரிந்தும் வெள்ளம் வழிந்தோடமுடியாதவாறு மக்கி மண்ணால் வீதி திருத்தப்பட் டுள்ளதால் இவ்வீதி மழைக்காலங்களில் வெள்ளக்காடாக காட்சியளிக் கின்றது.

இதனால் இப்பகுதி மக்கள், இவ்வீதியால் பயணம் செய்யும் பாடசால்லை மாணவர்கள், விவசாயப் பொருட்களை சந்தைப்படுத்தும் வியாபாரிகள் மற்றும், கர்ப்பிணித் தாய்மார்கள் என எல்லாவித மக்களும் பெருத்த சிரமத்தை எதிர்நோக்குகிறார்கள்.

மேற்குறித்த காரணங்களை கருத்திற்கொண்டு இவ்வீதியை மக்கள் பாவனைக்கு உகந்த வீதியாக திருத்தித் தருமாறு மிகவும் பணிவன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

மாளியவத்தை வாழ் மக்கள் சங்கானை

## மியன்மார் பொதுத்தேர்தலுக்குப்பின் ஆங்சாங் சூகிக்கு விடுதலை

மியன்மாரின் முக்கிய எதிர்க் கட்சித்தலைவரும் நோபல் பரிசு பெற்றவருமான ஆங் சாங்சூகி அந் நாட்டின் பொதுத்தேர்தல் முடிந்த பின்னர் விடுதலை செய்யப்படுவார் என தகவல்கள் வெளியாகியுள்ளன.

மியன்மாரில் தற்போது இராணுவ ஆட்சி நடந்து வருகிறது. அந்நாட்டின் முக்கிய எதிர்க்கட்சியான தேசிய ஜனநாயக லீக் கட்சியின் தலைவரான ஆங்சாங் சூகி வீட்டுக்காவலில் உள்ளார். இவரை விடுதலை செய்ய சர்வதேச நாடுகள் கோரிக்கை விடுத்து வந்தன. மியன்மாரில் அடுத்த மாதம் 7 ஆம் திகதி பொதுத்தேர்தல் நடைபெறவுள்ளது. இந்நிலையில் வியட்நாமில் உள்ள ஹனாயில் ஆசியான் உச்சிமாநாடு நடைபெற்றுவருகிறது. இதில் மியன்மார் வெளியுறவு அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்தியில் நவம்பர் 7 ஆம் திகதி நடைபெறவுள்ள பொதுத்தேர்தலுக்கு பின்னர் ஆங்சாங்சூகி விடுவிக்கப்படுவார் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ)

# இந்தோனேசியாவில் சுனாமி அனர்த்தத்திற்கு பலியானோர் எண்ணிக்கை 377 ஆக உயர்வு

(ஜகார்த்தா)

இந்தோனேசிய சுனாமிக்கு பலியானவர்களின் எண்ணிக்கை 377 ஆக உயர்ந்துள்ளது. இந்தோனேசியாவின் சுமாத்ரா தீவின் அருகிலுள்ள மென்டாவாய் தீவுக்கருகில் கடந்த திங்கட்கிழமை 7.7 ரிக்டர் அளவுக்கு நில நடுக்கத்தை தொடர்ந்து சுனாமி ஏற்பட்டது.

மென்டாவாய் தீவுகளில் 20 கி. மீ தூரத்துக்கு சுனாமியால் ஏற்பட்ட அலைகள் புகுந்தன. மென்டாவாய் தீவுகளில் தெற்கு பகாய் என்ற இடத்தில் உள்ள பெலு மொங்கா உள்ளிட்ட பல கிராமங்களில் ஆழிப்பேரலையில் சிக்கி 377 பேர் பலியாயினர்.

இன்னும் 379 பேரை காணவில்லை. சுனாமி பாதித்த பகுதிகளை இந்தோனேசிய அதிபர் சுசிலோ பாம்பங் பார்வையிட்டார். கடந்த 2004 ஆம் ஆண்டு ஏற்பட்ட சுனாமியில் இந்தோனேசியாவில் மட்டும் ஒரு இலட்சத்து 68 ஆயிரம் பேர் பலியாயினர். இதைத் தொடர்ந்து இந்தோனேசிய கடல் பகுதிகளில் சுனாமி எச்சரிக்கை கருவிகள் பொருத்தப்பட்டன. தற்போது அந்த கருவிகள் பழுதடைந்துள்ளதால் சுனாமி எச்சரிக்கையை உணர முடியவில்லை.



இதனால் தற்போது ஏராளமானவர்கள் பலியாகியுள்ளனர். இந்தோனேசியாவில் சுனாமி ஒரு பக்கம் தாக்க மற்றொரு பக்கம் ஜாவா தீவில் யோஜ்கார்த்தா நகருக்கு வெளியில் அமைந்துள்ள மெரபி எரிமலையும் வெடிக்க ஆரம்பித்தது.


கடும் வெப்பம் கொண்ட புகையும் , சாம்பலும், எரிமலை குழம்பும் வெளிக்கிளம்பி சுற்று வட்டாரங்களில் பரவ ஆரம்பித்தன. முன்னெச்சரிக்கையாக எரிமலையை சுற்றியுள்ள பகுதிகளில் வசித்த 11 ஆயிரம் பேர் வெளியேற்றப்பட்டு பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டனர்.

எனினும் எரிமலையில் இருந்து கடந்த 27 ஆம் திகதி வெளிப்பட்ட சாம்பல் மற்றும் வெப்பக் காற்றால் 34 பேர் உடல் கருகி பலியாயினர். எரிமலையின் அருகிலுள்ள கிராமங்கள் அனைத்தும் சாம்பல் படிந்து வெள்ளையாக காட்சியளிக்கிறது.

சாம்பல் தூசியினால் அருகில் உள்ள கிராம மக்கள் சுவாசிக்க முடியாமல் திணறி வருகின்றனர்.

கடந்த ஏப்ரல் மாதம் ஐஸ்லாந்தில் ஏற்பட்ட எரிமலை வெடிப்பால் பல கி.மீ உயரத்துக்கு சாம்பல் பரவி ஐரோப்பிய நாடுகளின் விமான போக்குவரத்து கடுமையாக பாதிக்கப்பட்டது.

இதேபோல மெரபி எரிமலை சாம்பல் பல கி.மீ தூரம் பரவி வருவதால் இந்திய விமான போக்குவரத்து பாதிக்கும் அபாயம் உள்ளதாக மும்பை ஐ.ஐ.டி பேராசிரியர் சந்திரசேகரம் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)



ஐரோப்பியன் யூனியனின் உச்சி மாநாடு பெல்ஜியம் நாட்டின் தலைநகர் பிரசெல்ஸ் நகரில் கூடியது. இதில் ஐரோப்பா நாடுகளைச் சேர்ந்த தலைவர்கள் ஒன்று கூடி விவாதம் நடத்தினர்.

## இந்தியா வர சீன பிரதமர் வென்ஜியாபோ விருப்பம்; வியட்நாமில் இருநாட்டு பிரதமர்கள் முக்கிய சந்திப்பு

அமெரிக்க அதிபர் பராக் ஒபாமா எதிர் வரும் நவம்பர் மாதம் முதல் வாரத்தில் இந்தியாவிற்கு சுற்றுப்பயணம் செய்கிறார். இந்த நிலையில் சீன பிரதமர் வரும் டிசம்பர் மாதம் இந்தியா வர விருப்பம் தெரிவித்துள்ளதாக பிரதமர் அலுவலக செயலர்கள் வட்டாரம் தெரிவிக்கிறது.

ஜப்பான்,மலேசியப் பயணம் முடிந்து இந்தியப் பிரதமர் ஆசியான் மாநாடு நடக்கும் வியட்நாம் சென்றடைந்தார். அங்கு சீன பிரதமர் வென்ஜியாபோவை சந்தித்துப் பேசினார்.

பிரதமருடன் வர்த்தக அமைச்சர் ஆனந்த் சர்மா, தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சிவசங்கரமேனன், செயலர் லதா ரெட்டி ஆகியோரும் உடன் இருந்தனர். இந்தச் சந்திப்பின் போது காஷ்மீர் வாழ் மக்களுக்கு விசா வழங்குவதில் சீனா மேற்கொள்ளும் நடவடிக்கைகள், பாக். ஆக்கிரமிப்பு காஷ்மீர் பகுதியில் சீன அரசு செய்யும் வளர்ச் சிப் பணிகள், அருணாசல பிரதேச விவகாரம் சுற்றுச்சூழல், ஜி.8 மாநாடு உள்ளிட்ட சாராம் சங்களை பிரதமர் விவாதித்தார். சீன பிரதமர் வென்ஜியாபோ வரும் டிசம்பர் மாதம் இந்தியா வர விருப்பம் தெரிவித்துள்ளார்.

கடந்த ஜுலை மாதத்தில் காஷ்மீர் லெப்டினன்ட் ஜெனரல் ஜஸ்வாலுக்கு சீனா விசா வழங்க மறுத்ததை அடுத்து இருநாட்டு இராணுவ பரிமாற்றம் நிறுத்திவைக்கப்பட்ட நிலையில் இந்த சந்திப்பு முக்கியத்துவம் பெறுகிறது.

இந்திய-சீனா உறவுகள் மேம்பாட்டு இருப்பதாகவும் இரு நாடுகளுக்கிடையே எவ்வித போட்டி மனப்பான்மையும் இல்லை என பிரதமர் மன்மோகன் சிங் கூறியுள்ளார்.

இன்று நடைபெறும் ஆசியான் மாநாட்டில் பிரதமர் சிங், அவுஸ்திரேலியா, சிங்கப்பூர், வியட்நாம், பிரதமர்களை தனித்தனியாக சந்தித்துப் பேசுகிறார். (ஸ்ரீ-2)




## சூரியனை போல இரண்டு மடங்கு பெரிய நட்சத்திரம் கண்டு பிடிப்பு

(லண்டன்)

சூரியனை போன்று இருமடங்கு பெரிய நியூட்ரான் (மின் இயக்கமற்ற) நட்சத்திரம் வான்வெளி கோளப்பாதையில் கண்டறியப்பட்டுள்ளது.

இது குறித்து இங்கிலாந்து நாட்டின் தேசிய கதிரியக்க வான் கோள்கள் கண்காணிப்பு துறையின் விஞ்ஞானி பால் டெமோரெஸ்ட் கூறியதாவது, சூரியனை போன்று இருமடங்கு பெரிய நியூட்ரான் நட்சத்திரம் கண்டறியப்பட்டுள்ளது. இது ஆச்சரியமாக உள்ளது. உயர் அடர்த்தி மற்றும் அணு இயற்பியல் தொடர்பான எங்களுடைய பல்வேறு விதிகளுக்கு பல்வேறு அர்த்தங்களை இந்த நட்சத்திர கண்டுபிடிப்பு அளித்துள்ளது.

அணுக் கருவை விட நியூட்ரான் நட்சத்திரம் பல மடங்கு அடர்த்தியானது இந்த நட்சத்திரத்தின் மூலப்பொருள் மட்டும் 5 ஆயிரம் தொன்னுக்கும் அதிகமான எடை கொண்டதாக இருக்கும். இது விண்வெளிக் கோளத்தில் சுற்றி வரும் போது இதிலிருந்து வெளிப்படும் கதிர்வீச்சுக்கள் விண்வெளியில் படும். இந்த கண்டுபிடிப்பு நியூட்ரான் நட்சத்திரங்கள் தொடர்பான ஆராய்ச்சியாளர்களின் விண்வெளி ஆராய்ச்சிக்கு புதிய வடிவத்தை கொடுத்துள்ளது என்றார். (ஸ்ரீ-2)


## இடைவிடாத நொறுக்குத் தீனிகளால் மூளை வளர்ச்சி பாதிக்கக் கூடும்

### ஆய்வில் தகவல்

இடைவிடாத நொறுக்குதீனி களை கொறிக்கும் குழந்தைகளின் மூளை வளர்ச்சி பாதிக்கக்கூடும் என்று அவுஸ்திரேலியாவில் நடத்தப்பட்ட ஆய்வில் தெரிய வந்தது.

அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த குழந்தை ஆரோக்கியம் தொடர்பான டெலிதான் நிறுவனம் பிறந்தது முதல் இளமை பருவம் வரை உள்ள ஆயிரத்து 800 பேரிடம் ஆய்வு மேற்கொண்டது. இதுகுறித்து இந்நிறுவனத்தின் உணவுத்துறை தலைவர் வெண்டி கூறுகையில், ஆய்வுக்கு எடுத்து கொள்ளப்பட்ட குழந்தைகளின் உணவும், மூளையின் செயல்பாடும் ஆராயப்பட்டது. அதிகளவில் நொறுக்கு தீனிகளை கொறிக்கும் குழந்தைகளின் மூளை வளர்ச்சிக்கு தீங்கு விளைவிப்பதுடன் அவர்களது பழக்க வழக்கங்கள் மற்றும் உணர்வுகளில் மாற்றம் காணப்பட்டது. இந்தப் பிரச்சனைகள் இளமை பருவத்தில் சத்தான உணவுக்கு மாறுவதால் குறைகிறது.

குழந்தைகளிடம் இரண்டு வித உணவு பழக்கங்கள் உள்ளன. ஒன்று காய்கறி,பழங்கள், பருப்பு வகைகள் , மீன் சாப்பிடுவது மற்றொன்று மேற்கத்திய முறையில் கொழுப்பு நிறைந்த உணவுகள், சர்க்கரை, உப்பு, சாக்லேட், பதப்படுத்தப்பட்ட உணவு சாப்பிடுவது. உணவில் அதிகளவில் ஒமேகா- 3 சேர்த்து கொள்ள வேண்டும். இது மூளை வளர்ச்சிக்கு முக்கியமானது. ஆனால் நொறுக்கு தீனிகளில் அது இருப்பதில்லை. மீன் உணவு மற்றும் பாதாம், பிஸ்தா, முந்திரி போன்றவற்றிலும் ஒமேகா- 3 உள்ளது என்றார். (ஸ்ரீ-2)



சர்வதேச பயங்கரவாதி ஒசாமா பின்லேடன் பிரான்ஸ் நாட்டிற்கு மிரட்டல் விடுத்ததையடுத்து தலைநகர் பாரீசில் உள்ள லவோர் மியூசியத்திற்கு பாதுகாப்பு பன்மடங்கு பலப்படுத்தப்பட்டுள்ளது.

# கிளிநொச்சி மாவட்ட மீள்குடியேற்ற நடவடிக்கை விரைவில் பூர்த்தியடையும்

## கிளி. அரச அதிபர் தெரிவிப்பு

(கொழும்பு)

கிளிநொச்சி மாவட்டத்தின் மீள் குடியேற்ற நடவடிக்கைகள் விரைவில் 100 வீதப் பூர்த்தியை எட்டவுள்ளதாக மாவட்ட அரசா ங்க அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தின் மீள்குடியேற்ற நடவடிக்கைகள் 99 வீதம் பூர்த்தி அடைந்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

பளை பிரதேச செயலகப் பிரிவில் முகமாலை மற்றும் கிளாலிப் பகுதிகளில் மிதிவெடி அகற்றும் நடவடிக்கை தற்போது இடம்பெற்று வருகிறது.

இந்த நடவடிக்கைகள் நிறைவு பெற்றதும் மேற்படி குடும்பங்களும் மீள்குடியேற்றப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

எஞ்சியுள்ள குடும்பங்களில் 25 குடும்பங்கள் காணிகள் இல்லாதவர்கள் ஆகையால் அவர்களுக்கு காணி வழங்குவதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (ஸ்ரீ-2)

# நல்லூரில் சிறு வியாபார நடவடிக்கைகளுக்கு பிரத்தியேக இடம் ஒதுக்கப்படல் வேண்டும்

## அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.நல்லூர் கந்தசாமி கோயில் பகுதிக்கு நேற்று திடீர் விஜயம் மேற்கொண்ட பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆலயச் சுற்றாடலை சுத்தமாக வைத்திருப்பதுடன், சிறு வியாபார நடவடிக்கைக்கென பிரத்தியேக மாக இடம் ஒதுக்கிகொடுக்கும்படியும் யாழ். மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜாவுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

நல்லூர் கந்தசுவாமி கோயில் வளாகத்தைச் சூழ தற்போது சுற்றுவேலி அமைக்கப்பட்டு வரும் நிலையில் சுற்றுவேலிக்குள் கச்சான் மற்றும் பழங்கள் உள்ளிட்ட எந்த விதமான வியாபார நடவடிக்கைகளுக்கும் அதேநேரம் அப்பகுதிக்குள் துவிச்சக்கர வண்டிகள் உள்ளிட்ட வாகனங்களை நிறுத்துவதற்கும் யாழ்.மாநகரசபை அனுமதி வழங்கக்கூடாது என்றும் கேட்டுக் கொண்டார்.

இதேவேளை கோயில் வளாகத்தில் உள்ள வெள்ளை மண் மழை வெள்ளத்தினால் அடித்துச் செல்லப்படாதவாறு கோயிலைச் சூழவும் சிறு அளவிலான சுற்றுச் சுவர் அமைக்கப்படவேண்டுமென்றும், அப்பகுதி பக்தர்கள் இளைப்பாற மட்டுமே பாவிக்க வேண்டுமென்றும் தெரிவித்த அமைச்சர் கோயிலின் தென்புற பிரதான வீதியின் வெளிப்புறத்தே சிறுவியாபார நடவடிக்கைகளில் ஈடுபடும் வியாபாரிகளுக்கென தற்காலிகமான வியாபார நிலையங்களை அமைத்துக் கொடுக்குமாறும், சுற்றுச் சூழலைப் பாதுகாக்கக்கூடிய வழிவகைகளை ஏற்படுத்திக் கொடுக்குமாறும் மாநகரசபை முதல்வருக்குப் பணிப்புரை வழங்கினார்.

இதனிடையே துவிச்சக்கர வண்டிகள் உட்பட வாகனங்களுக்கு தரிப்பிட வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட வேண்டும் என்பதுடன் பக்தர்களுக்கு எவ்விதமான இடையூறுகளும் ஏற்படாத வகையில் ஆலயச் சூழல் சுத்தமாகவும், சுகாதாரமாகவும் இருக்கவேண்டும் என்றும்கழிவு நீர் கோயில் வளாகத்தில் தேங்கி நிற்காதவாறு அப்புறப்படுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் கோயில் கிணற்றுக்கு அருகே ஒரு குப்பை சேகரிப்பு பெட்டியை வைத்து அதன்மூலம் குப்பைகளை அகற்றவேண்டும் என்றும் குறிப்பாக கோயிலுக்கு வரும் பக்தர்களுக்கு எவ்விதமான இடையூறுகளும் ஏற்படாத வகையில் சகல நடவடிக்கைகளும் அமைய வேண்டும் என்றும் அமைச்சர் வலியுறுத்திக் கூறியமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ)

# கடற்றொழில் நவீனமயமாக்கப்படும்

## அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவிப்பு

வளங்கள் பாதிக்கப்படாத வகையில் கடற்றொழில்துறை நவீனமயப்படுத்தப்பட நடவடிக்கையெடுக்கப்படுமென பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

வடமராட்சி, பொலிகண்டி மேற்கு கடற்றொழில் கூட்டுறவுச் சங்கம் மற்றும் செம்மீன் சனசமூக நிலையம் ஆகியவற்றைத் திறந்து வைத்து சிறப்புரையாற்றும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இங்கு அமைச்சர் மேலும் தெரிவிக்கையில்,

எமது வளங்கள் எவ்விதத்திலும் பாதிக்கப்படாத வகையில் கடற்றொழில் துறை எதிர்காலத்தில் நவீனமயப்படுத்தப்பட சகல விதமான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும் என்று உறுதிபடத் தெரிவித்தார்.

அத்துடன் கடற்றொழில் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும அதேவேளை வளமான வாழ்வுக்கும் சமூகத்திற்கும் வழிகோல வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார். (ஸ்ரீ)

# கூட்டுறவு தின விழாவும் புலமைப்பரிசில் வழங்கலும்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணியும் அங்கத்தவ சங்கங்களும் இணைந்து நடாத்தும் ''ஸ்தாபனத் தலைவர்'' அமரர் சு.நடேசு, மறைந்த பொது முகாமையாளர் அமரர் க. சந்திரராசா ஆகியோரின் நினைவு தினமும் கூட்டுறவு தின விழாவும் புலமைப் பரிசில் வழங்கலும் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு மானிப்பாயில் உள்ள வலிகாமம் கொத்தணி கலையரங்கு மண்டபத்தில் வலிகாமம் ப.தெ.வ.அ.கூ. சங்க கொத்தணித் தலைவர் க.மெய்யழகன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக பனை அபிவிருத்திச் சபை தலைவர் பசுபதி சீவரத்தினம், கௌரவ விருந்தினர்களாக யாழ். மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர், யாழ். மாவட்டக் கூட்டுறவு சபைத் தலைவர் இ. இராஜாராம் மற்றும் வடமாகாண ப.தெ.வ.அ.கூ.சங்க சமாசத் தலைவர் த. சிவலிங்கம் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

சிறப்பு விருந்தினர்களாக மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி அலுவலகர் த. பத்மானந்தன், தலைமைக் காரியாலய கூட்டுறவுப் பரிசோதகர் இ.விஜயமோகனராஜா, கூட்டுறவு அபிவிருத்தி அலுவலர் வி. மகேஸ்வரன், வலிகாமம் வடிசாலை கலால் பொறுப்பதிகாரி த. நந்தகுமார், யாழ். மாவட்ட கூட்டுறவுப் பணியகத்தின் நலனோன்பு கூட்டுறவு சங்கத் தலைவர் கா. சிவஞானம் மற்றும் யாழ். மாவட்ட ப.தெ.வ.அ. கூட்டுறவு நிறுவன பணியகத்தின் நலனோன்பு கூட்டுறவு சங்கத் தலைவர் சி. குணரத்தினம் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ஸ்ரீ-2)

# ஜனாதிபதித் தேர்தல் முறைகேடு தொடர்பாக பொன்சேகா தாக்கல் செய்த மனு நிராகரிப்பு



(கொழும்பு)

கடந்த 2009 ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தல் பெறுபேறுகளை இரத்து செய்யக்கோரி, முன்னாள் கூட்டுப் படைத் தலைமை அதிகாரி சரத்பொன்சேகா தாக்கல் செய்திருந்த மனு நேற்று உயர்நீதிமன்றத்தினால் நிராகரிக்கப்பட்டது.

ஐந்து பேரைக் கொண்ட நீதியரசர்கள் குழாம் இந்த மனு நான்கு காரணங்களின் அடிப்படையில் முழுமைப்படுத்தப்படவில்லை என சுட்டிக்காட்டி அதனை நிராகரித்தது.

ஜனாதிபதித் தேர்தலின் பெறுபேறுகளை எண்ணும் பணிகள் சட்டவிரோதமாக மேற்கொள்ளப்படவில்லை எனவும் மனுதாரர் தேர்தல் முறைமைக்கு அமைய தமது மனுவை சமர்ப்பிக்கவில்லை என்றும் நீதியரசர்கள் குழாம் தமது தீர்ப்பில் சுட்டிக்காட்டியுள்ளது. (ஸ்ரீ-2)

# பௌத்த தர்மங்களைப் பாதுகாக்க 5 சட்டமூலங்கள் சமர்ப்பிக்கப்படும்

## பிரதமர் தெரிவிப்பு



(கொழும்பு)

பௌத்த தர்மங்களைப் பாதுகாப்பதற்கு ஐந்து சட்டமூலங்களைப் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க எதிர்பார்ப்பதாகப் பிரதமர் டி.எம்.ஜயரத்தின தெரிவித்துள்ளார்.

களுத்துறை மாவட்டச் செயலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற சமயத் தலைவர்களின் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

தேரர்களுக்கே உரிதான ஆடையை அணிந்து கொண்டு பொய்யாகச் செயற்படமுடியாத விதத்தில் சட்டம் உருவாக்கப்படுமெனவும் சகல தேரர்களுக்கும் அடையாள அட்டையொன்று வழங்கப்படுமென்றும் அவர் கூறினார்.

நாட்டு மக்கள் மிகவும் சிரமமான முறையில் உழைப்பவற்றை சிலர் அழிக்க எதிர்பார்ப்பதாகக் குற்றஞ்சாட்டிய பிரதமர் இவர்கள் எதிர்காலத்தில் தர்மம் அழிவடையக் காரணமாக உள்ளதாகவும் தெரிவித்தார். (ஸ்ரீ-2)




கோப்பாய் ஆசிரிய கலாசாலைக்குத் தேவையான ஒருதொகுதிக் கணனிகளை கலாசாலையின் அதிபர் வே.கா. கணபதிப்பிள்ளையிடம் இலங்கை சமூகப் பாதுகாப்புச் சபையின் அதிகாரி ஜனாப் எம்.சீ.எம். அமீன் தனது சொந்த நிதியிலிருந்து வழங்குவதையும் அருகில் வர்த்தக கைத்தொழில் துறை அமைச்சர் ஜனாப் நிஷாட் பதியூதீன் நிற்பதையும் பின்னர் அதன் உபகரணங்களை விரிவுரையாளர்கள் முன்னிலையில் உப அதிபரிடம் வழங்குவதையும் படங்களில் காணலாம்.

# அங்குரார்ப்பண நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தினால் நடத்தப்படும் பட்டமேல் விசேட தேவைகள் சார் கல்வி டிப்ளோமா நிகழ்ச்சித் திட்டம் 2010 /2011 ஆம் ஆண்டிற்கான அங்குரார்ப்பண நிகழ்வு இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு பிறவுண் வீதியில் அமைந்துள்ள இலங்கைத் திறந்த பல்கலைக்கழக யாழ். பிராந்திய நிலையத்தில் நடைபெறும்.

இந் நிகழ்வின் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் பேராசிரியர் மா. சின்னத்தம்பி கலந்து சிறப்பிக்கவுள்ளார். (ஸ்ரீ-2)

வேறுபாடு எதுவுமின்றி அனைத்தையும் தூய்மையாக்கும் தண்ணீரைப் போன்றது ஒழுக்கமும் நல்லறமும்.

~ கௌதம புத்தர்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# கலாசாரப் பேரவைகள் களத்தில் குதிக்கவேண்டும்

எங்கள் இளம் பிள்ளைகளின் நடவடிக்கைகள் குறித்துப் பலரும் வேதனைப்படுகின்றனர். அதிலும் பள்ளி மாணவர்கள் எந்தவித அச்ச உணர்வும் இன்றி மாணவர்களுக்குரிய கட்டுப்பாடுகளை மீறிச் செல்வதானது,தமிழினத்தின் எதிர்கால இருப்பிற்கும் பண்பாட்டுப் பேணுகைக்கும் ஆரோக்கியமானதன்று.

அதேநேரம் எங்கள் பல்லைக் குத்தி நாங்களே முகர்ந்து கொள்வது அழகல்ல என்ற நிலையில் எதையும் மூடி மறைக்கும் ஒரு வகைப் பண்பாடும் எங்களிடம் இருக்கவே செய்கின்றது.

இத்தகைய 'அம்மல் பண்பாடு' தவறுகளை தூண்டுவதாகவும் தப்புகளுக்கு அங்கீகாரம் வழங்குவதாகவும் இருக்கும்.

எங்கள் பல்லைக் குத்தி நாங்கள் முகர்ந்து கொள்வதுகூட ஒரு வகையில் எங்கள் பற்றிய சுய மதிப்பீட்டுக்கு உதவும். எனவே எங்கள் ஒழுக்க வியலுக்கு பங்கம் ஏற்படுகின்ற போது கத்திக் குளறி குய்யோ முறையோ என்று கூப்பாடு போடுவது கூட, பூக்களையும் காய்களையும் கனிகளையும் கொத்தித்தின்று நாசம் செய்யவரும் விஷப் பட்சிகளை வெருட்டி அழிக்க உதவும். அதைத்தான் நாம் இப்போது கூட்டாகச் செய்ய வேண்டும்.

இருந்தும் சில பாடசாலைகள் தங்கள் சுய கௌரவத்தை பாதுகாப்பதற்காக மூடி மறைக்கும் விடயத்தில் முழு மூச்சாக இருக்கின்றன.

இந்நிலைமை மிக மோசமான விளைவை ஏற்படுத்துமேயன்றி வேறுஎந்த விதப்பயனையும் தராமாட்டா.

மூடி மறைத்தல் என்பது நயத்தக்க நாகரிகமான விடயமாக இருக்கலாம். ஆனால் மூடி மறைத்தலே, தவறுகள் தொடர்வதற்கு காரணமாக இருக்குமாயின் எங்கள் ஒழுக்கவியலை கட்டிக்காப்பதென்பது முடியாத காரியமாகும்.

ஆக, மூடி மறைத்தல் என்ற நிகழ்வோடு, உரிய நடவடிக்கையும் எடுத்தல் என்ற விடயத் தையும் புகுத்திக் கொள்வது அவசியப்பாடான விடயமாகும்.

இதற்காக ஒவ்வொரு பிரதேச செயலகங்கள் தோறும் இருக்கக்கூடிய கலாசாரப் பேரவைகளை களத்தில் இறக்க வேண்டும்.

பள்ளி மாணவரின் நடத்தை வித்தியாசமாக அமைகின்ற போது அது தொடர்பில் பெற்றோரின் கவனத்திற்கு கொண்டு வருவதிலும் குறித்த மாணவர்களை வழிபடுத்துவதிலும் கலாசாரப் பேரவையினர் கணிசமான பங்கை ஆற்ற முடியும்.

இங்கும் இரகசியம் பேணல் என்பது மிகமிக முக்கியமாகும். அதேநேரம் பாடசாலை மாணவர்கள் கையடக்கத் தொலைபேசிகளை பயன்படுத்துவதை அடியோடு வேரறுக்க வேண்டும்.

கையடக்கத் தொலைபேசிகளைக் கண்டறிய மாணவர்களை சோதனையிட்டால் கூட அது தவறன்று.

நல்லதைச் செய்வதற்காக எங்கள் இளம் சமூகத்தின் நல்லொழுக்கத்திற்காக சில கட்டுப்பாடுகளை வரையறை செய்து கொள்வது தேவையானதே.

# யாழ்ப்பாண நூலகத்தில் இடம்பெற்ற அசம்பாவித சம்பவத்துக்கு கண்டனம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பொதுநூலகத்தில் கடந்த 23 ஆம் திகதி இடம்பெற்ற சம்பவம் தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என யாழ்.மாவட்ட அரசசார்பற்றநிறுவனங்களின் இணையம் கேட்டுள்ளது.

இது தொடர்பில் யாழ்.மாநகரசபை முதல்வருக்கு அரசசார்பற்ற இணையங்களின் தலைவர் வி.கேசவன் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கடந்த 23.10.2010 ஆம் திகதி மாலை யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் சகல கட்டுப்பாடுகளையும் ஒழுங்கு விதிகளையும், வழிகாட்டலையும் மீறி நுழைவாயில் கதவுகளை உடைத்துக் கொண்டு யாழ்.நூலகத்தில் அத்துமீறிப் பிரவேசித்த நூற்றுக்கணக்கான தென் பகுதியைச் சேர்ந்தவர்களின் அடாவடித்தனமான நடவடிக்கைகளை முற்று முழுதாக கண்டிப்பதென நடைபெற்று இணையத்தின் மாதாந்தக் கூட்டத்தில் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

நூலகத்தைப் பார்வையிட வந்த இவர்கள் நூல்களின் பெருமையையும், நூலகத்தின் புனிதத்தையும் புரிந்து கொள்ளாதவர்களாக இருந்தமை இவர்களுடைய அத்துமீறிய கண்டிக்கத்தக்க நடவடிக்கைகளின் மூலம் வெளிப்படுகிறது.

மேலும் அத்துமீறி உட்பிரவேசித்த இவர்கள் றாக்கைகளில் இருந்த புத்தகங்களை வெறுப்புணர்ச்சியோடும், வெறித்தனத்தோடும் எடுத்து வீசிஎறிந்த நடவடிக்கை நாகரிகமற்ற செயலாகும்.

இத்தனைக்கும் இவர்கள் ஜனாதிபதியின் செயலகத்தின் பெயரைப் பாவித்து இந்த நடவடிக்கையில் ஈடுபட்டமை ஆச்சரியமளிப்பதும், அதிர்ச்சியளிப்பதுமாகும்.

இத்துடன் எமது நூலகத்தின் தோற்றத்தையும், மீள் வளர்ச்சியையும் குரோத மனப்பான்மையோடு இப்படிப்பட்டவர்கள் நோக்குகின்றார்கள் என்பதும் வருத்தத்துடன் கவனிக்கத்தக்கதாக உள்ளது.

இனிமேலும் இவ்வாறான அத்துமீறல்களும், அடாவடித்தனமும் இடம்பெறாதவகையில் உரிய நடவடிக்கைகளை மாநகரசபை நிர்வாகம் எடுக்கவேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறோம் என்றுள்ளது. (ச)

# சிறந்ததொரு இலங்கையை கட்டியெழுப்ப முன்வரவேண்டும்

## அமைச்சர் விமல் வேண்டுகோள்

(கொழும்பு)

கொழும்பு நகரில் அடையாளம் காணப்பட்டுள்ள சில சேரிப்புறக் குடியிருப்புக்கள் மற்றும் பலகையிலான வீடுகள் அகற்றப்படும். கொழும்பின் சேரிப் புறக் குடியிருப்புக்களை அகற்றுவதை யாராலும் தடுக்கமுடியாது. இவ்வாறு அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

அடுத்த 6 ஆண்டுகளில் இந்த நாட்டினை சிறந்ததொரு இலங்கையாகக் கட்டியெழுப்ப வேண்டும். அதற்காக சிங்கப்பூர், மலேசியா போன்ற நாடுகளின் தலைவர்கள் முன்னெடுத்த சில கண்டிப்பான சட்டதிட்டங்களை அமுல்படுத்த வேண்டும். கொழும்பை நகரமயமாக்கி சிறந்தவொரு நகரமாக மாற்றுவதற்கு சில கண்டிப்பான சட்டதிட்டங்களை அமுல்படுத்தவேண்டும்.


மேற்கண்டவாறு அம்பாறையில் நடைபெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றும் போது அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

அத்திட்டங்களுக்கு இந்நாட்டு மக்கள் அடிபணியவேண்டும். வீடுகள் நிர்மாணிக்கும் போது ஓர் கட்டுமான வரைவு வரையப்பட்டு அதனை அரசு அமுல்படுத்தும். கொழும்பு நகரில் அடையாளம் காணப்பட்டுள்ள சில சேரிப்புறக் குடியிருப்புக்கள் மற்றும் பலகையிலான வீடுகள் அகற்றப்படுவதை யாராலும் தடுக்க முடியாது.

சேரிப்புறக் குடியிருப்புக்கள் உள்ள காணிகளைவெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு வழங்கி நவீன முறையிலான வீடுகள், ஹோட்டல்கள், மெகா சிற்றிகள் அமைப்பதற்கு வழங்கப்படும்.

இத்திட்டத்தினை அமுல்படுத்துவதற்கு முன் ஐ.தே.கட்சியினர் அரசியல் இலாபம் கருதி அவர்களது வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தி ஒரு சிறந்த பாதுகாப்பு மற்றும் சுகாதார சூழல் கொண்டு வருவதை எதிர்க்கின்றனர்.

ஐ.தே.கவினர் இம் மக்களை காலத்துக்குக் காலம் வாக்குப் பெறுவதற்காக பயன்படுத்துகின்றனர். இவர்கள் இம் மக்களை இவ்வாறே பன்நெடுங்காலமாக வைத்துக் கொள்ளவே விரும்புகின்றனர்.



புறக்கோட்டையிலுள்ள நடைபாதை வியாபாரக் கொட்டில்களை தடுத்து நிறுத்தி அவர்களுக்கு ஒரு நிரந்தரக் கட்டடத்தை அமைத்துக் கொடுத்தபின் அதனை சகலரும் வரவேற்கின்றனர்.

தற்பொழுது இரு பாதை ஓரங்களிலும் மக்கள் நடமாடுவதற்கு வசதி ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளதாக மேலும் குறிப்பிட்டுள்ளார். (ச-5)

# மந்திகைச் சந்தியூடான போக்குவரத்துக்குத் தடை

(யாழ்ப்பாணம்)

யாழ்.பருத்தித்துறை வீதியின் விஸ்தரிப்புப் பணிகளுக்காக மந்திகை ஆஸ்பத்திரிச் சந்தியில் இருந்து மந்திகைச் சந்திவரை நாளை மறுதினம் திங்கட்கிழமை முதல் மறுஅறிவித்தல் வரை மூடுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் பிரதம பொறியியலாளர் வி.சுதாகர் அறிவித்துள்ளார்.

அன்றிலிருந்து சகலவிதமான வாகனங்களும், பொதுமக்களும் மறுஅறிவித்தல் வரை மாற்றுப்பாதையாக துன்னாலை சந்திவரை பயணம் செய்து பின் மந்திகைச் சந்தியை அடையுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள். (ச)

# ஹைகோப் வழக்கு விவகாரம் தனுன சார்பில் வழக்குரைஞர் ஆஜர்

(கொழும்பு)

ஹைகோப் வழக்கின் சந்தேக நபரான முன்னாள் இராணுவ தளபதி சரத் பொன்சேகாவின் மருமகனான தனுன திலகரத்னவின் சார்பில் வழக்குரைஞர் அசேல றெக்காவ நேற்று கொழும்பு மேல் நீதிமன்றத்தில் ஆஜரானார்.

இந் நிலையில் தனுனவின் சார்பில் தான் ஆஜராகப் பணிக்கப்பட்டுள்ளதாகவும் இந்த பணிப்புரை வெளிநாட்டில் தங்கியுள்ள தனுனவினால் தனக்கு விடுவிக்கப்பட்டதாகவும் இருப்பினும் தனுனவின் இருப்பிடம் குறித்து தனக்கு எதுவும் தெரியாது என்றும் மேற்படி வழக்குரைஞர் நீதிமன்றில் தெரிவித்தார்.

இதனையடுத்துமன்றில்வாதிட்ட அரசதரப்பு வழக்குரைஞரான தமித் தொடவத்த, வழக்குத் தொடுநர் இதை ஆட்சேபிக்க மாட்டாரெனவும் ஆனால் எதிர்தரப்பு வழக்குரைஞர்இந்தவிடயத்தில்பொறுப்பேற்க வேண்டும் எனவும் கூறினார்.

இந் நிலையில் மேல் நீதிமன்ற நீதிபதியான சுனில் ராஜபக்ஷ, பிரதிவாதி சார்பில்தோன்றவழக்கறிஞர்அசேல றெக்காவுக்கு அனுமதி வழங்கினார். இருப்பினும் முழுவிடயத்திலும் இவர் பொறுப்பேற்க வேண்டும் எனவும் நீதிபதி கூறினார். (ச-5)

# சுவாமி விவேகானந்தரின்

## சிக்காக்கோ சொற்பொழிவுகள்



மனிதன் இவ்வுலகில் தாமரை இலையைப் போல வாழ வேண்டும் என்று ஸ்ரீகிருஷ்ணர் சொன்னார். அது தண்ணீரில் வளர்கிறது. ஆனால் தண்ணீரால் நனைவதில்லை. அது போல மனிதன் இந்த உலகில் வாழ வேண்டும். இதயத்தை இறைவன்பால் வைத்து கைகளால் வேலை செய்ய வேண்டும். இவ்வுலக நன்மை அல்லது மறுவுலக நன்மை கருதி, இறைவனிடம் அன்பு செலுத்துவது நல்லது தான். ஆனால் அன்புக்காகவே அவன்ன அன்பு செய்வது சிறந்தது. 'எம்பெருமானே, எனக்குச் செல்வமோ, பிள்ளைகளோ, கல்வியோ வேண்டாம். உனது திருவுள்ளம் அதுவானால் நான் மீண்டும் மீண்டும் பிறக்கத் தயாராக இருக்கிறேன். ஆனால் நான் பலன் கருதாது உன்னிடம் அன்பு கொள்ளவும், தன்னலமின்றி அன்புக்காகவே அன்பு செய்யவும் அருள் செய்' என்கிறது ஒரு பிரர்த்தனை.




யா/மாரீசன் கூடல் றோ.க.த.க. பாடசாலையின் வாணி விழாவில் இடம்பெற்ற மாணவர்களின் கலை நிகழ்வையும் கலை நிகழ்வில் பங்குபற்றிய மாணவர்களுடன் அதிபர், ஆசிரியர்கள் நிற்பதையும் படங்களில் காணலாம்.

## புலிகளுக்கு வெடிபொருட்கள் கொள்வனவு செய்ய ராஜ் ராஜரட்ணம் உதவிகளை வழங்கினார்

### சிங்கள ஊடகம் தகவல்

(கொழும்பு)

அமெரிக்காவின் பிரபல தமிழ் வர்த்தகர் ராஜ் ராஜரட்ணத்தின் பணத்தைக் கொண்டு தமிழீழ விடுதலைப்புலிகள் வெடிபொருட்களை கொள்வனவு செய்ததாக சிங்கள ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இலங்கையில் குண்டு வெடிப்புச் சம்பவங்களை மேற்கொள்வதற்காக 205 தொன் வெடிபொருட்களை தமிழீழ விடுதலைப் புலிகள் கொள்வனவு செய்ததாகவும் அதற் கான நிதி உதவிகளை ராஜ் ராஜரட்னம் வழங்கியதாகவும் அமெரிக்காவின் எவ்.பி.ஐ. புலனாய்வுப் பிரிவினர் நடத்திய விசாரணைகளின் மூலம் இந்தத் தகவல்கள் கிடைக்கப் பெற்றுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

பிரதீபன் என்ற புலி ஆதரவாளரின் மடிக் கணனியில் காணப்பட்ட தகவல்களைக் கொண்டு விசாரணை நடத்தப்பட்டுள்ளதாகவும் அதி சக்தி வாய்ந்த வெடிபொருட்கள் கொள்வனவு செய்யப்பட்ட விபரங்கள் இந்தக் கணனியில் காணப்பட்டதாகவும் குறிப்பிடப்படுகிறது.

இதேவேளை நிதி மோசடியில் ஈடுபட்ட குற்றத்திற்காக ராஜ் ராஜரட்ணம் கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப் பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

## பல்கலையில் இடம்பெறும் வன்முறைக்கும் ஜே.வி.பி.க்கும் எந்த சம்பந்தமுமில்லை

(கொழும்பு)

பல்கலைக்கழக கட்டமைப்பிற்குள் இடம் பெற்று வரும் வன்முறைக்கும் ஜே.வி.பிக்கும் எந்த சம்பந்தமுமில்லை எனவும் சில மாணவர்களின் செயற்பாடுகளை தாம் கண்டிப்பதாகவும் நாடாளுமன்ற உறுப்பினர் அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

தேர்தல் பிரசாரங்களில் கூட எந்த வன்முறையிலும் ஈடுபடாத ஜே.வி.பி. வெளியில் இருந்து மேற்கொள்ளும் அரசியல் போராட்டங்களுக்கு இணையான போராட்டங்களை பல்கலைக்கழகத்திற்குள் மேற்கொண்டு வருகிறது எனவும் அனுரகுமார திஸா நாயக்க குறிப்பிட்டுள்ளார்.

பல்கலைக்கழங்களுக்குள் காணப்படும் அமைதியான சூழலே ஜே.வி.பி.யின் மாணவர் அமைப்புக்கு மிகவும் முக்கியமானது. மாணவர்களுடன் மேற்கொள்ளும் அரசியல் ரீதியான செயற்பாடுகளுக்கு பல்கலைக்கழகத்தில் அமைதியான சூழல் இருப்பது அவசியமானது.

பல்கலைக்கழகத்தில் அமைதியான சூழல் நிலவினால் அது ஜே.வி.பி.யின் மாணவர் அமைப்புக்கு சாதகமாக அமைந்து விடும் என்பதை அறிந்த அரசாங்கம் வன்முறைச் சம்பவங்களை உருவாக்கி வருகிறது எனவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

பத்திரமுல்லை பெலவத்தையில் உள்ள ஜே.வி.பி.யின் தலைமையகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இந்த கருத்துக்களை வெளியிட்டுள்ளார். (ஸ்ரீ-2)


## நவம்பர் 6 இல் ஒபாமா இந்தியாவுக்கு விஜயம்

அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா நான்கு நாள் சுற்றுப்பயணம் மேற்கொண்டு எதிர்வரும் நவம்பர் மாதம் 6 ஆம் திகதி இந்தியாவுக்கு விஜயம் செய்கின்றார்.

அவரது பயணத்திட்டத்தை வெள்ளை மாளிகை நேற்று முன்தினம் வெளியிட்டது. நவம்பர் 7 ஆம் திகதி மும்பையில் பள்ளி ஒன்றில் குழந்தைகளுடன் தீபாவளியைக் கொண்டாடவுள்ளார்.

அமெரிக்க அதிபராக பதவியேற்ற பின் முதல் தடவையாக இந்தியாவிற்கு சுற்றுப் பயணம் மேற்கொள்கின்றமை குறிப்பிடத்தக்கது.

ஒபாமாவின் இந்தியப் பயண விவரத்தை நேற்று முன்தினம் வெள்ளை மாளிகையில் தேசிய பாது காப்பு துணை ஆலோசகர் மைக் புரோமன் நிருபர்களிடம் அறிவித்தார். (ஸ்ரீ-2)



வடக்கு மாகாணக் கல்வி அமைச்சினால் ஆரம்ப பிரிவு மாணவர்களிடையே நடத்தப்பட்ட துரித கணித 100 சதுரப் பெட்டியில் வெற்றியீட்டிய சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியின் தரம் 3 இல் கல்வி கற்கும் மாணவியான செல்வி. த. டிசானியை அதிபர் கு.விமலன் பாராட்டி கௌரவித்தார்.

## அடுத்த வருட ஆரம்பத்தில் தேசிய ஔடதக்கொள்கை அமுல்படுத்தப்படும்

### சுகாதார அமைச்சர் தெரிவிப்பு



தேசிய ஔடதக் கொள்கை அடுத்த ஆண்டு ஜனவரி முதலாம் திகதி முதல் அமுலுக்கு வருகிறது என சுகாதார அமைச்சர் மைத்திரி பால சிறிசேன தெரிவித்துள்ளார்.

ஒழுங்கான தேசிய ஔடதக் கொள்கையொன்று இல்லாத காரத்தினால் சுகாதாரத் துறையில் பாரிய சீர்கேடுகள் ஏற்பட்டன.

அளவுக்கதிகமான மருத்துப் பொருட்கள் இறக்குமதி, தரமற்ற மருந்துப் பொட்களின் இறக்குமதி, காலாவதியாதல், தரமற்ற மருந் துப் பொருட்களை நோயாளிகளுக்கு கொடுத்தல் போன்ற சீர்கேடுகள் நடைபெற்றன.

இவையனைத்தையும் கவனத்தில் கொண்டு இலங்கைக்கு வருடமொன்றுக்கு தேவையான சகல மருந்துப்பொருட்களும் தரமானதாகவும் தரக்கட்டுப்பாட்டுடன் உத்தரவாதத்துடன் இறக்குமதி செய்தல், பகிர்ந்தளித்தல், நோயாளிகளுக்கு வழங்குதல் மற்றும் களஞ்சியப்படுத்தல் போன்ற அனைத்து விடயங்களும் மேற்கொள்ளப்படும் எனவும் அமைச் சர் மேலும் தெரிவித்துள்ளார். தகவல் திணைக்களத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு அவர் இதனைத் கூறினார். (ஸ்ரீ-2)

## சிறுவர், முதியோர் தினவிழா

(யாழ்ப்பாணம்)

சமூக அபிவிருத்தி மன்றத்தினால் நடத்தப்படும் சிறுவர் முதியோர் தின விழா நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு நாவலர் மண்டபத்தில் விழாக் குழுத்தலைவர் திருமதி நவநீதம் ஜெகதீசன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவின் பிரதம விருந்தினராக யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார், கௌரவ விருந்தினராக யாழ்.மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களும் இணைத்தலைவர் வி.கேசவன் மற்றும் சிறப்பு விருந்தினராக கடவுளின் குழந்தைகள் நிறுவனத்தலைவர் டாக்டர் பி.ஆனந்தகுமார் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

இவ்விழாவில் மன்றத்தினால் செயற்படுத்தப்படும் 55 கழகங்களில் இருந்தும் 55 வறுமைக் கோட்டின் கீழுள்ள சிறுவர்களும் 55 முதியோர்களும் கௌரவிக்கப்படவுள்ளனர்.

அத்துடன் சி.முதலியார், ம.கண் பதிப்பிள்ளை , திருமதி நா. மகேஸ்வரி ஆகியோரின் சேவைகளையும் பாராட்டி விசேட கௌரவிப்புச் செய்யப்படவுள்ளனர்.

இந்நிகழ்வில் மன்றத் தலைவி திருமதி ருக்மணி ஆனந்தவேலினால் மன்ற அறிமுக உரையும் நிகழ்த்தப்படவுள்ளதாக இம் மன்ற நிர்வாகச் செயலாளர் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# தென்னாபிரிக்க அணியில் இடம்பிடிப்பது கடினமான விடயம்

## கிப்ஸ் தெரிவிப்பு



(ஜோகனஸ்பேர்க்)

உலகக்கிண்ணக் கிரிக்கெட் தொடருக்கான தென்னாபிரிக்க அணியில் இடம்பிடிப்பது மிகவும் கடினமான விடயம் என அதிரடி ஆரம்பத் துடுப்பாட்டவீரர் கிப்ஸ் தெரிவித்துள்ளார்.

அடுத்த ஆண்டு இந்திய-இலங்கை-பங்களாதேஷ் நாடுகள் இணைந்து உலகக்கிண்ணக் கிரிக்கெட் தொடரை நடத்துகின்றன. இதற்காக ஒவ்வொரு அணிகளும் முழுவீச்சில் தங்கள் வீரர்களைத் தயார்ப்படுத்தி வருகின்றன.

இந்நிலையில் கடந்த பெப்ரவரி மாதம் முதல்தென்னாபிரிக்க அணியின் அதிரடி ஆரம்பத் துடுப்பாட்டவீரர் கிப்ஸ் மோசமான போர்ம் காரணமாக அணியில் இடம்பிடிக்க முடியாமல் திணறிவருகிறார். இதுகுறித்து கிப்ஸ் கூறியதாவது,

அடுத்த ஆண்டு நடக்கவுள்ள உலகக்கிண்ண கிரிக்கெட் தொடருக்கு தேர்வு செய்யப்படும் பட்சத்தில் நான்காவது முறையாக உலகக்கிண்ணத் தொடரில் விளையாடும் வாய்ப்பைப் பெறுவேன். ஆனால் அது எளிதான காரியமல்ல. தற்போதுள்ள தென்னாபிரிக்க அணியினரின் செயற்பாடு அருமையாகவுள்ளது.

மேற்கிந்தியத்தீவுகள், சிம்பாவே அணிகளுக்கு எதிரான சமீபத்திய ஒருநாள் தொடரில் சில இளம் வீரர்களுக்கு வாய்ப்பு வழங்கப் போவதாக தெரிவித்துள்ளார்.

எனவே அணியில் இடம்பிடிக்க, இழந்த போர்மை முதலில் மீட்கவேண்டும். கடந்த சில வாரங்களாக துடுப்பாட்டத்தில் நல்ல முன்னேற்றம் கண்டுவருகிறேன். விரைவில் எனது திறமையை நிரூபித்து அணியில் இடம்பிடிக்க போராடுவேன். இவ்வாறு கிப்ஸ் கூறினார்.

# இந்தியாவுடனான தொடரை சமநிலை செய்தாலே போதும்

## நியூசிலாந்து பயிற்றுவிப்பாளர் யோசனை

(வெல்லிங்டன்)

இந்தியாவுக்கு எதிரான 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில், 2 போட்டியை சமனிலை செய்தாலே சிறந்த முடிபாகும் என நியூசிலாந்து அணியின் பயிற்சியாளர் மார்க் கிரேட்பாட்ச் தெரிவித்துள்ளார்.

இந்திய சுற்றுப்பயணம் செய்யவுள்ள நியூசிலாந்து அணி, 3 டெஸ்ட் மற்றும் 5 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் பங்கேற்க உள்ளது. முதல் டெஸ்ட் எதிர்வரும் 4ஆம் திகதி அகமதாபாத்தில் ஆரம்பமாகிறது. அதன்பின் 2வது, 3வது டெஸ்ட் முறையே ஐதராபாத் (நவ.12-16), நாக்பூர் (நவ. 20-24) நகரங்களில் நடக்கிறது.

இதுகுறித்து நியூசிலாந்து அணியின் பயிற்சியாளர் மார்க் கிரேட்பாட்ச் கூறியதாவது,

சமீபத்தில் பங்களாதேஷ் அணிக்கு எதிரான ஒருநாள் தொடரை 0:4 என இழந்தது வருத்தம் அளிக்கிறது. இதற்கு முன்னணி துடுப்பாட்ட வீரர்களின் பொறுப்பற்ற ஆட்டம் முக்கிய காரணம். உலகக்கிண்ண தொடர் ஆரம்பமாக இன்னும் சில மாதங்களே உள்ள நிலையில் இதுபோன்ற மோசமான தோல்விகளை ஏற்றுக்கொள்ள முடியாது.

இந்திய அணி கடைசியாக விளையாடிய 13 டெஸ்ட் போட்டியில் ஒரு டெஸ்டில் மட்டுமே தோல்வி கண்டுள்ளது. எனவே அடுத்த மாதம் இந்தியாவுக்கு எதிராக ஆரம்பமாகவுள்ள டெஸ்ட் தொடர், நியூசிலாந்து வீரர்களுக்கு பெரும் சவால் நிறைந்ததாக இருக்கும். இத்தொடரில் நடக்கவுள்ள 3 போட்டியில், 2 போட்டியை சமனிலை செய்தாலே நியூசிலாந்து அணிக்கு ,சிறந்த முடிபாக இருக்கும். ஆனால் இதற்கு நியூசிலாந்து வீரர்கள் கடுமையாக போராட வேண்டும்.

நியூசிலாந்து அணியில் இடம் பெற்றுள்ள நிறைய வீரர்களுக்கு போதிய டெஸ்ட் அனுபவம் இல்லாதது பின்னடைவான விடயம். குறிப்பாக ரோஸ் ரெய்லர் இதுவரை.25 டெஸ்டில் மட்டுமே விளையாடியுள்ளார். இவர் நிறைய டெஸ்ட் போட்டியில் பங்கேற்க வேண்டும். அப்போதுதான் இவர் ஓய்வு பெறும் போது 100 டெஸ்ட் போட்டியில் விளையாடி இருக்க முடியும். இவ்வாறு நியூசிலாந்துப் பயிற்றுவிப்பாளர் கிரேட்பாட்ச் கூறினார்.

# இந்திய பட்மின்டன் வீராங்கனை செய்னா சம்பளம் ஒரு கோடி ரூபாய்

## கிரிக்கெட் வீரர்களுக்கு சவால்

(ஐதராபாத்)

பட்மின்டன் அரங்கில் வெற்றி நாயகியாக வலம் வரும் இந்தியாவின் செய்னா நேவல், விளம்பர உலகிலும் கொடிகட்டிப் பறக்கிறார். தற்போது ஒரு நிறுவனத்துக்கு விளம்பர மொடலாக தோன்ற, ஒரு கோடி ரூபாய் சம்பளம் பெறுகிறார். இதன் மூலம் கிரிக்கெட் வீரர்களுக்கு சவால் விடுத்துள்ளார்.



செய்னா நேவல்

இந்தியாவின் நட்சத்திர வீராங்கனை செய்னா நேவல்(20). சமீப காலமாக பட்மின்டன் போட்டிகளில் அசத்தி வருகிறார். இந்த ஆண்டு சிங்கப்பூர் ஓபன், இந்தோனேசியன் சுப்பர் சீரிஸ் உட்பட தொடர்ந்து மூன்று தொடர்களில் ஹட்ரிக் பட்டம் வென்று சாதித்தார். டில்லி காமன்வெல்த் போட்டியில் தங்கம் கைப்பற்றினார்.

இப்படி வெற்றி மேல் வெற்றி பெற செய்னாவை ஒப்பந்தம் செய்ய முன்னணி விளம்பர நிறுவனங்கள் போட்டியிடுகின்றன. இவரை "ஏர்டெல்" போன்ற நிறுவனங்கள் ஆண்டுக்கு ஒரு கோடி ரூபாய் சம்பளம் கொடுத்து ஒப்பந்தம் செய்துள்ளன. இதன் மூலம் கிரிக்கெட் வீரர்களுக்கு நிகரான அந்தஸ்தை பெற்றுள்ளார்.

### தோனி முன்னிலை

கடந்த 2006ல் இந்திய கிரிக்கெட் வீரர் சச்சினை பிரபல விளம்பர நிறுவனம் மூன்று ஆண்டுகளுக்கு 180 கோடி ரூபாய்க்கு ஒப்பந்தம் செய்தது. இந்த சாதனையை அணித் தலைவர் தோனி தகர்த்தார். இவரை 3 ஆண்டுகளுக்கு 210 கோடி ரூபாய்க்கு "ரிதி ஸ்போர்ட்ஸ்" நிறுவனம் ஒப்பந்தம் செய்தது. சச்சின் ஒரு பொருளுக்கு மொடலாக தோன்ற 3 கோடி ரூபாய் பெறுகிறார். தோனி ஒரு பொருளுக்கு 6 கோடி ரூபாய் சம்பளம் வாங்குகிறார். சேவாக் போன்ற மற்ற முன்னணி வீரர்கள் ஒரு கோடி ரூபாய் தான் பெறுகின்றனர். இவர்கள் வரிசையில் செய்னாவும் சேர்ந்துள்ளார். டென்னிஸ், நட்சத்திரம் சானியா 10 முதல் 15 இலட்சம் ரூபாய் தான் பெறுகிறார்.

தற்போது ஏர்டெல், அடானி வில்மர், யோனெக்ஸ், ஜெய்ப்பி சிமென்ட்ஸ் போன்ற நிறுவனங்கள் செய்னாவை கோடிகள் கொடுத்து ஒப்பந்தம் செய்துள்ளன. பட்மின்டன் வீராங்களை பற்றிய தொடரில் நடிப்பதற்காக ஸ்டார் "டிவி" நிறுவனமும் இவரை அணுகியுள்ளது. ஒரு தொடருக்கு 5 இலட்சம் ரூபாய் அளிக்க முன் வந்துள்ளது. இது குறித்து செய்னா கூறுகையில்,

காமன்வெல்த் போட்டியில் தங்கம் வென்றபின், எனது விளம்பர வருமானம் உயர்ந்து விட்டது. கிரிக்கெட் வீரர்கள் தவிர, மற்ற விளையாட்டு நட்சத்திரங்களுக்கும் முக்கியத்துவம் அளிப்பது மிகுந்த மகிழ்ச்சி அளிக்கிறது என்றார்.

# தென்பகுதி சுற்று...

அத்துமீறி பிரவேசிக்க முயற்சித்ததாகவும், இதனால் நூல்களுக்கு சேதம் ஏற்பட்டதாகவும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. மருத்துவ பணியாளர்களுக்கான கருத்தரங்கொன்று நூலகத்தில் நடைபெற்றுக் கொண்டிருந்தமையினால் குறித்த தெற்கு பயணிகளுக்கு அனுமதி மறுக்கப்பட்டதாகவும் இதனால் நூலக அதிகாரிகளுக்கும் பயணிகளுக்கும் இடையில் வாய்த்தர்க்கம் ஏற்பட்டதாகவும் சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார்.

தெற்கிலிருந்து வரும் பயணிகள் அரசாங்க கட்டடங்களைப் பயன்படுத்தி வருகின்றனர் அரசாங்க வளங்களை துஷ்பிரயோகம் செய்து வருகின்றனர்.

யாழ்ப்பாண விடுதிகளில் தங்கும் சில தெற்கு பயணிகள் பாதுகாப்புப் பிரிவினருடன் காணப்படும் தொடர்புகளைப் பயன்படுத்தி விடுதிக்கட்டணங்களை செலுத்த மறுப்பதாக தெரியவருகிறது. இவ்வாறான நடவடிக்கைகளினால் தெற்குப் பயணிக்கும் உள்ளூர் மக்களுக்கும் இடையில் முறுகல் நிலையை ஏற்படுத்தியுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனினும், இவ்வாறான எந்தவொரு மோதல் சம்பவமும் இடம்பெறவில்லை என இராணுவப் பேச்சாளர் உபய மெதவல தெரிவித்துள்ளார். (ச-5)

# மாபெரும் போராட்டம்...

முன்னாள் சர்வாதிகாரியான ஹிட்லர் 1933 ஆம் ஆண்டு என்ன செய்தாரோ அவையனைத்தும் படிப்படியாக இன்று இலங்கை அரசும் செய்துவருகிறது. ஹிட்லரின் ஆட்சி போலவே இலங்கை அரசின் ஆட்சியும் இருக்கிறது என நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர குறிப்பிட்டுள்ளார்.

நேற்று வெள்ளிக்கிழமை மாலை கண்டியில் இடம்பெற்ற பொதுக்கூட்டமொன்றில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இங்கு மேலும் உரையாற்றிய மங்கள சமரவீர,

முன்னாள் சர்வாதிகாரியான ஹிட்லர் 1933 ஆம் ஆண்டு என்ன செய்தாரோ அவை அனைத்தும் படிப்படியாக இன்று இலங்கை அரசும் செய்துவருகிறது.

இச்சர்வாதிகாரப் போக்குக்கு எதிராக ஒரு இலட்சம் பேரைத்திரட்டி எதிர்வரும் டிசம்பர் 10 ஆம் திகதி கொழும்பில் மாபெரும் ஆர்ப்பாட்டமொன்றை மேற்கொள்ளவுள்ளோம்.

1933 ஆம் ஆண்டுஹிட்லருக்கு எதிராக மக்கள் எழும்போது ஹிட்லர் அரச அதிகாரங்களை கைப்பற்றினார். அதுபோல் இன்று இலங்கையிலும் நீதிச்சேவை ஆணைக்குழு, பொலிஸ் சேவை ஆணைக்குழு, தேர்தல் ஆணைக்குழு, அரச சேவை ஆணைக்குழு போன்ற பல்வேறு ஆணைக்குழுக்களை ஜனாதிபதி தனது கையில் எடுத்துள்ளார்.

அவ்வாறு எமது ஜனநாயக உரிமைகள் பறிக் கப்பட்ட தினம் தான் செப்டெம்பர் 8 ஆம் திகதியாகும். எனவே நவம்பர் 8 ஆம் திகதிக்கு இரண்டு மாதம் பூர்த்தியாகின்றது. அன்றும் நாடளாவிய நீதியில் ஓர் ஆர்ப்பாட்டம் செய்யவுள்ளோம். அதேவிதமாக எதிர்வரும் டிசம்பர் மாதம் 8 ஆம் திகதி 3 மாதமாகிறது. இருப்பினும் டிசம்பர் மாதம் 10 ஆம் திகதி உலக மனித உரிமை தினமாகையால் அன்று எமது உரிமை மீறப்பட்ட தினத்தை நினைவு கூறுவதுடன் மாபெரும் போராட்டமொன்றையும் நடத்தி சரத் பொன்சேகாவை மீட்டெடுப்போம் என்றும் அவர் கூறினார். (ச-5)

# கிளிநொச்சி பிரச்சினை...

வாகனங்கள், கிளிநொச்சி மத்திய கல்லூரியிலுள்ள குறைபாடுகள், துணுக்காய் பிரதேசம் மற்றும் முல்லைத்தீவு உள்ளிட்ட பிரதேசங்களிலுள்ள மக்களின் பிரச்சினைகள் குறித்து கலந்துரையாடப்பட்டது.

மேற்படி வாகனங்களை மக்களிடம் கையளிக்க ஆவன செய்வதென்றும், கிளிநொச்சி மத்திய கல்லூரியில் தங்க வைக்கப்பட்டுள்ள 51 குடும்பங்களையும் வேறிடத்துக்கு மாற்றி பாடசாலைக் கட்டடத்தை உடனடியாக வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் கட்டளை அதிகாரி பிரதி அமைச்சரிடம் உறுதியளித்தார். உரிய ஆவணங்களைச் சமர்ப்பிப்பதன் மூலம் வாகனங்களை மீளப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்வதாக கட்டளை அதிகாரி உறுதியளித்துள்ளார்.

அத்துடன் கிளிநொச்சி இராணுவ முகாமுக்கு முன்னாலுள்ள பொதுமக்களின் காணிகளில், அவர்களைக் குடியமர்த்துவதற்கு இராணுவ அதிகாரிகளுடன் கலந்துரையாடி ஆவன செய்வதாகவும் உறுதியளிக்கப்பட்டது. துணுக்காய் இராணுவ முகாமுக்கு அருகிலுள்ள 28 குடும்பங்களையும் வெளியேறும்படி இராணுவத்தினர் கேட்டுள்ளமை குறித்துக் கேட்கப்பட்ட போது, இக்குடும்பங்களை வெளியேற்றுவதில்லை எனவும், அதேவேளை துணுக்காய் பிரதேச இராணுவம் பயன்படுத்தி வரும் பொது மண்டபத்தை மக்களின் பாவனைக்கு வழங்குவது எனவும் உறுதியளிக்கப்பட்டது.

இச்சந்திப்பில் அமைச்சின் இணைப்புச் செயலாளர் பொன்.ரவீந்திரன், சிறி றெலோ அமைப்பின் தலைவர் பி.உதயராசா, அமைச்சின் மக்கள் தொடர்பு அதிகாரி ஜஸ்ரின் ஆகியோரும் கலந்து கொண்டனர். (ச-5)

# யாழ்.பொது நூலகத்தை...

எனினும் நூலகருடன் தொடர்புகொள்ள முடியவில்லை. இதேவேளை யாழ்.நூலகத்திற்கு முன்பாக படையினர் கம்பி போட்டு வீதித்தடை ஏற்படுத்துவதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை யாழ்.நூலகத்தில் கடந்த 23 ஆம் திகதி நடைபெற்ற அசௌகரிய நிலையை ஊடகங்கள் தவறான முறையில் பிரசுரித்து இனரீதியான குழப்பங்களை உருவாக்க முயற்சிக்கிறது. எப்பொழுதும் பத்திரிகைகள் உண்மைக்குப்புறம்பான செய்திகளைப் பிரசுரிக்க வேண்டாம் என நான் இச்சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார். யாழ். பொது நூலகத்தில் கடந்த 23 ஆம் திகதி நடைபெற்ற அசௌகரிய நிலை தொடர்பான கலந்துரையாடல் நூலக கேட்போர் கூடத்தில் நேற்றுக் காலை 8.00 மணியளவில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றும் போது,

தவறுகளைத் திருத்திக்கொள்ளுதல் வேண்டும். தவறுகளைப்பற்றி மீண்டும் மீண்டும் விவாதித்து தவறுகளை ஏற்படுத்தி விடக் கூடாது.

நூல்நிலையத்தைப் பார்வையிட வரையறை செய்யப்படவேண்டும் . வரையறை செய்யப்படும் சந்தர்ப்பத்தில் தான் இவ்வாறான பிரச்சினைகள் எதிர்வரும் காலங்களில் ஏற்படுவதைத் தவிர்க்க முடியும். நூலகத்தில் பொலிஸ் மற்றும் இராணுவத்தினர் பாதுகாப்பில் ஈடுபடுவது அவசியம். காரணம் தவறுகள் எச்சந்தர்ப்பத்திலும் ஏற்பட இடமளிக்கக்கூடாது என அவர் தெரிவித்தார். (ச-5,6)

நல்லூர்
சரவணா ரெக்ஸ்
தீபாவளியை முன்னிட்டு
மாபெரும் மலிவு
விற்பனை
இல.526,529,
பருத்தித்துறை வீதி,
நல்லூர் ,
யாழ்ப்பாணம்.
(சி-1519)

# அரசின் ஏகாதிபத்தியத்துக்கு...

தேர்தலின்போது முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் தேர்தல் கூட்டத்தின் போது இடம்பெற்ற குண்டுத் தாக்குதலில் சந்திரிகா கடும் காயங்களுக்குள் உள்ளாகி ஒரு கண்ணையும் இழந்தார்.

அத்துடன் அந்த சம்பவத்தில் பலர் கொல்லப்பட்டனர். இந்த சம்பவத்திற்கு காரணமானவர் என குற்றம் சாட்டப்பட்ட சக்திவேல் என்பவருக்கு நீதிமன்றம் 30 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்துள்ளது.

ஆனால் இவ்வாறான பயங்கரவாதிகளிடமிருந்து நாட்டை மீட்டு நாட்டை ஐக்கியப்படுத்திய சரத் பொன்சேகாவை ஜனாதிபதி அப்போது பாராட்டிய போதும் இன்று அவருக்கு 30 மாத சிறை தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

அதேவேளை தலதா மாளிகை குண்டு வெடிப்பிற்கும் அரந்தலாவ கொலைகளுக்கும் காரணமாக இருந்த கருணாவுக்கு அமைச்சுப் பதவி வழங்கப்பட்டுள்ளது.

சரத்பொன்சேகா செய்த ஒரே தவறு ராஜபக்ஷவை எதிர்த்து ஜனாதி தேர்தலில் போட்டியிட்டதே ராஜபக்ஷவை ஆதரிப்பவர்களுக்கு அமைச்சு பதவிகள் அவருக்கு எதிராக செயல் படுபவர்களுக்கு சிறைத் தண்டனை, அச்சுறுத்தல் போன்ற ஏகாதிபத்திய ஜனநாயக விரோதச் செயல்களே இடம்பெறுகின்றது.

இன்று பலர் அச்சுறுத்தப்படுகின்றனர். ஊடகங்கள் சுதந்திரமாக செயல்பட முடியாத வகையில் அச்சுறுத்தப்படுகின்றன. ஊடகவியலாளர்கள் தாக்கப்படுகின்றனர்.

கைது செய்யப் படுகின்றனர். ஊடகங்கள் சுதந்திரமாக சுவரொட்டிகளைக் கூட ஒட்ட முடியாதுள்ளன. அவ்வாறு ஓட்டுபவர்கள் பொலிஸ் கைதுகளுக்கும் விசாரணைகளுக்கும் ஆளாக நேரிடுகின்றது.

இன்று இவ்வாறான அச்சுறுத்தல்கள் காரணமாக சில அமைச்சர்கள்கூட பயந்துபோய் உள்ளனர். பால்மா, அரிசி போன்ற அத்தியாவசியப் பொருட்களின் விலைகளும் இன்று மக்களால் தாங்கிக் கொள்ள முடியாதளவு விலை உயர்வு கண்டுள்ளது.

எனவே அரசின் இவ்வாறான ஏகாதிபத்திய செயற்பாடுகளுக்கு ஜனநாயக விரோத செயல்களும் நாம் ஒன்றுபட்டு எதிர்ப்பு நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என்றார்.

இதனையடுத்து இந் நிகழ்வில் கலந்துகொண்ட அனைவரும் கறுப்புப்பட்டி அணிந்து சரத் பொன்சேகாவின் விடுதலையை வேண்டி ஊர்வலமாகச்சென்று நாததேவாலயபூமி யில் விஷேட பூஜைகளை நடத்தியமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

# பேராதனை பல்கலை...

பொதுவான நிகழ்ச்சிகளும் இருப்பதாலும் உபவேந்தர் ஆலோசனைக்குழு தீர்மானித்ததற்கிணங்க கலை, விவசாய பீடங்கள் மூடப்பட்டதே தவிர பல்கலைக் கழகங்களில் ஏற்பட்டுள்ள குழப்ப நிலை காரணமாக மூடப்படவில்லை எனவும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை மாணவர்களுக்கிடையே ஏற்பட்ட மோதல் காரணமாக பேராதனை பல்கலைக் கழகத்தின் பொறியியல் மற்றும் விஞ்ஞான பீடங்கள் கடந்த வாரம் மூடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

புலமைப் பரிசில் -2011
தரம் 4 மாணவர்களுக்கான மாதிரிப் பரீட்சை-01
ஆரம்பம்: 31.10.2010 [ஞாயிறு]
காலை 8.00/9.00/ 10.00, மாலை 2.00/3.00/4.00
❁ விரும்பிய எந்நேரத்திலும் பரீட்சைக்கு தோற்றலாம்.
❁ அனுமதிகளை இன்று முதல் பதிவு செய்யவும்
நாவலர் கல்வி நிலையம்
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
(சி-1517)

கேபிள் TV இயக்குனர்களுக்கான கலந்துரையாடல்
யாழ் மாவட்ட கேபிள் T.V இயக்குனர்களுக்கான அவசர கலந்துரையாடல் நடைபெறவுள்ளது. அனைத்து கேபிள் T.V இயக்குனர்களும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.
காலம் : 31.10.2010 (ஞயிற்றுக்கிழமை)
நேரம் : 11 மணி காலை
இடம் : யாழ் தொழில்நுட்ப நிறுவனம் (JTI)
இல. 45, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
T.P No. : 0777710785
0777917790
(2771)

Sampanthar Modern Clinic
கிளிநொச்சியில்
யாழ் சம்பந்தர் மொடேர்ன் வைத்திய நிலையம் கிளிநொச்சி கச்சேரி முன்பாக நடைபெறுகிறது.
❖ காலை, மதியம், மாலை 4 மணி முதல் 8 மணி வரை OPD வெளிநோயாளர் வைத்திய சேவை.
❖ ஈ.சி.ஜி, சிறுநீர், இரத்தப் பரிசோதனைகள் நடைபெறுகின்றன.
யாழ். சம்பந்தர் கிளினிக்கு வருகைதரும் வைத்திய நிபுணர்கள் கிளிநொச்சிக்கும் வருகை தர உள்ளனர். எதிர்வரும் 4.11.2010 வியாழக்கிழமை யாழ்.போதனா வைத்தியசாலை மகப்பேற்று பெண் நோயியல் வைத்திய நிபுணர் வருகைதர உள்ளார். உங்கள் பதிவுகளை உடன் மேற்கொள்ளுங்கள்.
சம்பந்தர் மொடேர்ன் வைத்திய நிலையம்
கச்சேரி முன்பாக
கிளிநொச்சி.
T.P - 0778730129
(2774)

# 'விடுதலைப்...

ஒன்றுதான் போபால் நகரம்.

அங்கு ஒரு தொழிற்சாலையை அமைத்து இருந்தனர். 16 மாநிலங்களில் இருந்தும் மொத்தமாக 4 ஆயிரம் சதுரகிலோமீற்றர் பரப்புடைய நிலம் இவர்களின் கட்டுப்பாட்டில் உள்ளது.

16 மாநிலங்களிலுள்ள 194 மாவட்டங்களில் இவர்களின் பிரசன்னம் உண்டு.

அவற்றில் 58 மாவட்டங்களில் சொந்தமாக அரசு ஒன்றை ஸ்தாபித்து ஆட்சி நடத்துகின்றனர். இங்கு சொந்தமாக நீதிமன்றங்கள் வைத்திருக்கின்றார்கள்.

இங்கு இவர்களின் கட்டுப்பாட்டிலுள்ள மக்கள் இவர்களுக்கு வரி செலுத்துகின்றனர்.

வருடாந்தம் இந்திய ரூபாயில் 200 கோடி வரி இவர்களுக்கு கிடைக்கப்பெறுகின்றது.

இவர்கள் இந்தியாவின் தமிழீழ விடுதலைப்புலிகளாக உள்ளனர் என்றுள்ளது. (ச-5)

நல்லூர்
சரவணா ரெக்ஸ்
தீபாவளி பண்டிகை
அதிரடி,
விசேட கழிவு
இல.526,529,
பருத்தித்துறை வீதி,
நல்லூர் ,
யாழ்ப்பாணம்.
(சி-1519)

## மரண அறிவித்தல்கள்

### இராசரத்தினம் சிவபுரநாதர்

தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் சங்கரத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட இராசரத்தினம் சிவபுரநாதர் நேற்று (29.10.2010) காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராசவதியின் அன்புக் கணவரும் ,இந்துமதி , காலஞ்சென்ற சிவராசா ஆகியோரின் தந்தையும் கோபிகிருஷ்ணாவின் (பொலிஸ் பயிற்சிக் கல்லூரி, களுத்துறை) அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று காலை 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக வழுக்கையாறு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சங்கரத்தை
வட்டுக்கோட்டை
0778335487

தகவல்:
கோபிகிருஷ்ணா(பேரன்)
பொலிஸ் பயிற்சி கல்லூரி,களுத்துறை)

(சி-1520)

### கனகசபை செல்லம்மா

புளியங்கூடலை பிறப்பிடமாகவும் வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட கனகசபை செல்லம்மா நேற்று (29.10.2010) காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கனக்சபையின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சபாநாயகம், செல்வநாயகம், ராமச்சந்திரன், வரதலட்சுமி மற்றும் புவனேஸ்வரி, புஷ்பவதி, வரதராஜா ஆகியோரின் அன்புத் தாயாரும் கனகமணி, லீலாவதி, புஸ்பராணி, பழனியப்பா, அருட்செல்வம், நடராஜா, பத்மினி ஆகியோரின் அன்பு மாமியும் காலஞ்சென்ற சோமசுந்தரத்தின் சகோதரியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் 51-1/2, கோலிங்வூட் பிளேஸ், வெள்ளவத்தை எனும் முகவரியிலுள்ள அவரது இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு தகனக் கிரியைகள் நாளை (31.10.2010) காலை 9 மணிக்கு பொரளை கனத்தை இந்து மயானத்தில் நடைபெறும். இவ்வறிவித்லை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கெள்ளவும்.

51-1/2 , கோலிங்வூட் பிளேஸ்,
வெள்ளவத்தை.

தகவல்:
வா.அருட்செல்வம்
(மருமகன்)

(சி-1521)

மாதாந்தம் ரூபா 30,000.00 ஐ விட
அதிக சம்பளத்துடன்
வாழ்வில் முன்னேறத் தயாராகுங்கள்!!!
'எடிசலாட்' விற்பனை மேம்பாட்டு அதிகாரி
➢ நீங்கள் 18 வயதுக்கு மேற்பட்டவரா?
➢ நுகர்வோருடன் பேசி விற்பனையை மேம்படுத்த விருப்பமுள்ளவரா?
➢ தொழிற் பயிற்சிகள் , சலுகைகள் பெற ஆர்வமுள்ளவரா?
➢ இலங்கையின் முதற்தரமான தொலைபேசி நிறுவனத்தில் பணியாற்றி , வாழ்வில் முன்னேற விருப்பமுள்ளவரா?
அப்படியாயின் நாங்கள் தேடுபவர் நீங்கள்தான்!
❁ சுயமாக தயாரித்த சுயவிபரக் கோவையுடன்,( BIO-DATA)
❁ வார நாட்களில் மு.ப.08.30-பி.ப.02.00 மணிவரை
❁ கீழ்வரும் முகவரிக்கு நேரில் சமுகமளிக்கவும்.
(சி-1481)
விபரங்களுக்கு அழையுங்கள்
Mr.H.Mohamed
07 22 465478
விரைந்து வாருங்கள்
R&R TELECOM JAFFNA (PVT)LTD
127,MPCS BUILDING
K.K.S.ROAD,JAFFNA. 021 2221644

யாழ்ப்பாணத்தில் முதல் முறையாக!
25க்கும் அதிகமான தொழில்வாய்ப்புக்களுக்கு உத்தரவாதமான ஊடகக் கற்கைநெறிகள்
➤ கணனியுடன் ஊடகவியல்
➤ வானொலி ஊடகவியல்
➤ தொலைக்காட்சி ஊடகவியல்
➤ பத்திரிகை பக்க வடிவமைப்பு
➤ கிராபிக் டிசைனிங் ➤ போட்டோகிராபி
டென்மார்க்கில் பயிற்சி பெற்ற ஊடகவியலாளரினால் நடாத்தப்படுகிறது
3 மாத கற்கைநெறி - 2 மாத பணியிடப் பயிற்சி
விளக்கக் கருத்தரங்கு
நாளை ஞாயிறு காலை 10 மணிக்கு
சிகரம் ஊடக இல்லம்
221, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்
தொ.பே: 021 300 80 60, நேரடி: 077 77 33 931

அன்பொளி கல்வியகம்
யாழ். இந்துக்கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்.
தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை - 2010
சித்தியடைந்த மாணவர்களுக்கான
பரிசளிப்பு நிகழ்வு
எமது கல்வியகத்தில் கற்றுச் சித்தியடைந்த மாணவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வு 31.10.2010 ஞாயிற்றுக்கிழமை (நாளை) பிற்பகல் 2.00 மணிக்கு சைவபரிபாலன சபை மண்டபத்தில் நடைபெறும். மாணவர்களைத் தவறாது கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.
(C-1516)
இயக்குநர்.

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 30.10.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.